மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

வேளாண்மைக்கென்று அமைந்திருந்த துறையை ‘உழவர் நலனின்றி உழவுத் தொழில் இல்லை’ என்கின்ற உன்னதமான உண்மையை உலகுக்கு உணர்த்தும் வகையில் ‘வேளாண்மை - உழவர் நலத் துறை’ என்று பெயர் மாற்றம் செய்து வேளாண் பெருமக்களையெல்லாம் பெருமிதம் கொள்ள வைத்த பெருந்தகை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, தமிழகத்தின் முதல் வேளாண் நிதிநிலை அறிக்கையை பணிவுடன் அளித்து என் பணியைத் தொடர்கிறேன்.

இந்த முதல் வேளாண் நிதிநிலை அறிக்கையை வாசிக்கும் வாய்ப்பை எனக்கு அளித்துத் தமிழக சட்டமன்ற வரலாற்றின் நூற்றாண்டில் என்னையும் பெருமைப்படுத்திய உங்களுக்கு என் நன்றி மலர்களை அர்ப்பணிக்கிறேன்.

தாய்நாட்டின் தலைநகரில் வேளாண் சட்டங்கள் வேண்டாம் என்று மன உறுதியுடன் போராடி வருகின்ற உழவர் பெருமக்களுக்கும் இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையை காணிக்கையாக்கி அவை முன்பு படிக்க விழைகிறேன்.

மனித பரிணாம வளர்ச்சியில் மூன்று புரட்சிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. முதலாவது, விழிப்புணர்வில் ஏற்பட்ட புரட்சி. இரண்டாவதாக வேளாண்மை புரட்சி. மூன்றாவதாக அறிவியல் புரட்சி.

வெவ்வேறு இடங்களில் வேட்டையாடித் திரிந்த மனிதனை விளைநிலத்தில் ஊன்றி நாகரிகப்படுத்தியது வேளாண்மை புரட்சி. தோராயமாக பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த இந்தப் புரட்சியே மனிதனைப் பண்பட்டவனாக மாற்றியது. தன் உணவைத் தானே உற்பத்தி செய்துகொள்ளும் திறனை அடைந்ததும் அவன் சிந்திக்கத் தொடங்கினான். அப்போது கலைகள் பிறந்தன, கவிதைகள் தவழ்ந்தன, மாடங்கள் உருவாயின, குடும்ப அமைப்புகள் தோன்றின,

நிர்வாகம் அமைந்தது, மனித வரலாறு பாய்ச்சலில் முன்னேறத் தொடங்கியது. நிச்சயமில்லாத வாழ்க்கையிலிருந்து நிம்மதியான வாழ்க்கைக்கு அவனைப் பாதுகாப்பாகக் கொண்டுவந்து சேர்த்தது வேளாண்மையே என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை.

வேளாண்மை என்கிற சொல்லே நெடிய வரலாறு கொண்டது. தொன்மை வாய்ந்த அந்தப் பழஞ்சொல்லைத் தொல்காப்பியர் ‘வேளாண்’ என்று மூன்று இடங்களில் ஆளுகின்றார். அச்சொல்லுக்கு ‘உதவி’ என்பதே பொருள். சங்க இலக்கியங்களிலும் வேளாண்மை என்ற சொல் ‘உதவி’ என்ற பொருளிலேயே கையாளப்படுகிறது. திருவள்ளுவர் வேளாண்மை என்னும் சொல்லை நான்கு இடங்களில் கையாளுகின்றார். அங்கேயும் ‘உதவி’ என்ற பொருளையே அது தருகிறது. திருவள்ளுவர் வேளாண்மை என்று, இன்று நாம் குறிப்பிடுவதை ‘உழவு’ என்று வேளாண்மையை அதிகாரமாக அளித்திருக்கிறார்.

மனித வாழ்க்கைக்கு அடிப்படையான உணவை நேரிடையாகவும், உடை, உறைவிடத்தை மறைமுகமாகவும் தந்து உதவி புரிவதோடு தம் வயலில் விளைகிற பொருட்களை வருந்தி வந்தவர்க்கு அளித்து உதவி செய்கிற மனப்பான்மை உழவர்களுக்கே உண்டு என்கிற காரணத்தால் ‘உதவி’ என்கிற பொருளில் வழங்கிய வேளாண்மை, காலப்போக்கில் ‘உழவைச்’ சுட்டும் பெயராக ஆனது என்று கூறலாம்.

இன்று, மனித நாகரிகம் பன்மடங்கு உயர்ந்தாலும் விண்ணளவு வளர்ந்தாலும் உணவின்றி உயிர்வாழ இயலாது. பெருகி வரும் மக்கட்தொகைக்குப் பசியாற்றும் அமுதசுரபிகளாக மண்ணை மாற்றிக்காட்டும் மகத்துவம் பெற்றவர்கள் உழவர் பெருமக்கள். அவர்களை உயர்த்தி அழகு பார்க்கும் அரும்பெரும் நோக்கத்தோடு

இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை ,இன்று இப்பேரவை முன்பு வைக்கப்படுகிறது.

வேளாண்மை என்பது வேளாண் துறையையும், தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறையையும், விதைச்சான்று - அங்ககச் சான்று துறையையும், வேளாண்மை பொறியியல் துறையையும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையையும், வேளாண் விற்பனை - வேளாண் வணிகத் துறையையும், சர்க்கரைத் துறையையும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தையும் உள்ளடக்கிய மாபெரும் தலைமைச் செயலக அங்கமாகச் செயல்பட்டு வருகிறது.

வேளாண்மையைத் தனித்துப் பிரித்துப் பார்க்க இயலாது. மேழிச்செல்வம் என்று அழைக்கப்படுகிற கால்நடைகளையும், பண்ணையில் வளர்க்கப்படும் மீன்களையும், முசுக்கொட்டையில் உருவாகும் பட்டு வளர்ச்சியையும் வேளாண்மைக்குள் அடக்குவதே பொருத்தம். வேளாண்மை செழித்து ஓங்க நாட்டுயர்வைத் தரும் கூட்டுறவுத் துறையும் முக்கியம். ஊரக வளர்ச்சியின் சீரான பங்களிப்பும் தேவை. வருவாய்ப் பேரிடர் மேலாண்மைத் துறையின் கடைக்கண் பார்வையும், நிலங்களை முறையாகப் பராமரிக்க கட்டாயம் அவசியம். உணவுத் துறையின் செயல்பாடு இருந்தால்தான் உற்பத்தி செய்த உபரியை விற்பனை செய்ய இயலும். நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலம்தான் தமிழக மக்களுக்கு விநியோகம் நிகழ்த்த இயலும். நீர்வள ஆதாரம் இருந்தால்தான் வரப்புயரும்போது நீர் உயரும். எரிசக்தி கிடைத்தால்தான் மண்ணுக்கு அடியில் இருக்கும் நீர் வயல்களில் சீறிப்பாயும். எனவே இத்தனை துறைகளும் மண்ணுக்கு மருதாணி பூசி நிலத்தில் மரகதப் போர்வை போர்த்தி அழகு பார்க்கும் வேளாண் துறைக்கு ஒதுக்கும் நிதிப் பங்களிப்பையும் இணைத்தே இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை இப்பேரவையின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**கருத்துக் கேட்புக் கூட்டங்கள்**

மக்களாட்சி மாண்புக்கு விரோதமாக, தனித்து முடிவெடுத்து அறிவித்து செயல்படுத்தும் போக்கைக் கடைப்பிடிக்காத மகத்துவம் கொண்டது இந்த அரசு என்பதை அனைவரும் அறிவர். எனவே நிதிநிலை அறிக்கை ஒன்றை வேளாண்மைக்கென்று தனியே தாக்கல் செய்ய வேண்டும் என்றதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாசனநீர் பாய்வதற்கு முன்பே தங்கள் வியர்வையால் வயல்களை விளைநிலமாக்கிய விவசாயப் பெருமக்களை அழைத்து அவர்கள் கருத்துகளை எல்லாம் உள்வாங்கி, அதற்குப் பின்னரே இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை உருவாக வேண்டும் என்று உத்தரவு அளித்தார். அதன் அடிப்படையில் பல மாவட்டங்களுக்குச் சென்று உழவர் பெருமக்களை அழைத்து அவர்கள் உணர்வுகளுக்கெல்லாம் ஒற்றடம் கொடுக்கும் வகையில் எங்கள் காதுகளை இரவல் தந்து, மனத்தை அவர்களிடம் ஒப்படைத்து, ஆலோசனைகள் நிகழ்த்தப்பட்டன.

துறையின் அமைச்சர் என்கின்ற மாபெரும் பொறுப்பைத் தோள்களில் தாங்கியிருக்கிற நான், அரசு அலுவலர்களுடன் 18 மாவட்ட விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களை, தஞ்சாவூர், திருச்சி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி பகுதிகளில் கேட்டறிந்தேன். உலகளாவிய வேளாண் வல்லுநர்களின் கருத்துக்கள் காணொலிக் காட்சி மூலம் கேட்டறியப்பட்டன. மேலும், எனது தலைமையில் வேளாண் ஏற்றுமதியாளர்கள், வேளாண் வணிகர்களுடன் கூட்டம் நடத்தப்பட்டது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு நிதி -மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து அனைத்துத்தரப்பு விவசாய சங்க

பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோரின் கருத்துக்களும் கேட்டறியப்பட்டன.

தொடர்ந்து, விவசாயிகள், தொழில்நுட்ப வல்லுநர்களுடன் சென்னையில் கூட்டம் நடத்தி, கருத்துக்கள் கேட்டறியப்பட்டன. இக்கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாத விவசாயிகள் தங்கள் கருத்துக்களை ‘‘உழவன் செயலி’’ வாயிலாகவும், மின்னஞ்சல் வாயிலாகவும் தெரிவித்தனர். மேலும், தலைமைச்செயலர் அவர்கள் உழவர்நலன் தொடர்புடைய அனைத்துத் துறைத் தலைவர்களுடனும் கலந்து ஆலோசித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து, அதனடிப்படையில், தமிழக வரலாற்றில் முதல்முறையாக 2021-2022 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மையில் தற்போதுள்ள சவால்கள்**

விளைநிலங்கள் எல்லாம் வீட்டுமனைகள் ஆவதால் குறைந்து வரும் சாகுபடிப் பரப்பு, மங்கி வரும் மண்வளம், அதிகம் சுரண்டப்படுவதால் பற்றாக்குறையாகும் நீர்வளம், வேளாண் தொழிலை மேற்கொள்ள முன்வர இளைஞர்களிடம் தென்படும் ஆர்வமின்மை, கட்டுப்படியாகும் விலை கிடைக்காத விளைபொருட்கள், சாகுபடிக்காகும் அதிகத் தொகை, அறுவடைக்குப் பின் உண்டாகும் இழப்பு என்கிற கடின சுமைகளை உலகைச் சுமந்துகொண்டிருக்கும் ‘அட்லசைப்போல’ உழவர்கள் சுமந்து கொண்டிருக்கிறார்கள்.

**தொலைநோக்குத் திட்டம்**

நிதிநிலை அறிக்கையை வேளாண்மைக்கென்று தனியாகத் தாக்கல் செய்வது ஓர் உயர்ந்த தொலைநோக்குப் பார்வையை உள்ளடக்கியது. தொலைநோக்குப் பார்வை வேறு, பகல் கனவு வேறு.

விழிப்புணர்வால் விளைவது தொலைநோக்குப் பார்வை. பகல் கனவு என்பது எட்டாத ஒன்றுக்கு ஆசைப்படுவது. உணவுத் தன்னிறைவைத் தமிழகம் ஓரளவு எட்டிவிட்டது என்று நம் உற்பத்தித் திறனை வைத்து உறுதிசெய்ய இயலும். நாம் உணவுப் பாதுகாப்பையும், ஊட்டச்சத்துப் பாதுகாப்பையும் அடுத்த பத்தாண்டுகளுக்குள் அடைந்துவிட வேண்டும் என்பதே இந்தச் சீரிய முயற்சியின் அடிப்படை நோக்கம். மாவுச்சத்தை மட்டுமே வழங்கும் உணவு தானியங்களோடு நின்றுவிடாமல், வைட்டமின்கள், தாதுப்பொருட்கள், புரதச்சத்து, கொழுப்புச்சத்து போன்றவற்றையும் வாரிவழங்கும் பால்வளம், மீன்வளம், காய்கனிகள் பெருக்கம் ஆகியவற்றையும் ஊக்கப்படுத்தி தமிழகத்து இளைஞர்களை, நிமிர்ந்த தோள்கள் கொண்டவர்களாக, நேர்கொண்ட பார்வை உள்ளவர்களாக மாற்றுவதே ஊட்டச்சத்துப் பாதுகாப்பின் நோக்கம்.

நம் நோக்கத்தை மையமாக வைத்து அதை அடைய இலக்குகளை வகுப்பது இன்றியமையாத செயல்பாடு. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்று தொலைநோக்குத் திட்டங்களை நிர்ணயித்திருக்கிறார்கள்.

(அ) தமிழ்நாட்டில் கூடுதலாக 11.75 இலட்சம் எக்டர் பயிரிடச் செய்து, தற்போதுள்ள நிகர சாகுபடிப் பரப்பான 60 விழுக்காடு என்பதை 75 விழுக்காடாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

தரிசு நிலங்களை பரிசு நிலங்களாக மாற்றிட, குளங்கள், பண்ணைக்குட்டைகள், கசிவு நீர்க் குட்டைகள், தடுப்பணைகள், ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து நீர் ஆதாரங்களைப் பெருக்கி, பத்தாண்டுகளில், தற்போது தரிசாக உள்ள நிலங்களில் 11.75 இலட்சம் எக்டர் பரப்பில் குறைந்த நீர் செலவில் சாகுபடி செய்யக் கூடிய சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறி

மற்றும் பழப்பயிர்களை பயிரிட்டு நிகர சாகுபடிப் பரப்பு 75 விழுக்காடாக உயர்த்தப்படும்.

(ஆ) 10 இலட்சம் எக்டர் அளவுக்கு உள்ள இருபோக சாகுபடி நிலங்கள் அடுத்த பத்தாண்டுகளுக்குள் இருமடங்காக, அதாவது, 20 இலட்சம் எக்டராக உயர்த்தப்படும்.

மாமன்னன் கரிகாற்சோழன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே காவிரியின் குறுக்கே கல்லணையை அமைத்து, ஓடும் காவிரியை, தவழச்செய்து வீணாகும் நீரினை ஏரி, குளங்களில் சேமித்து வாய்க்கால் வழியாக நீரினை எடுத்துச்சென்று, வேளாண்மையைத் தழைத்தோங்கச் செய்தது போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு பார்வையின்படி, புதிய நீராதாரங்களை உருவாக்கியும், பெருமளவு நுண்ணீர்ப் பாசன தொகுப்புகளை உருவாக்கியும், தற்போதுள்ள 10 இலட்சம் எக்டர் இருபோக சாகுபடி பரப்பினை, குறுகிய கால சிறுதானிய பயிர்கள், பயறு வகைப் பயிர்கள், பருத்தி, எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள், கீரைகள் ஆகியவைகளைப் பயிரிட்டு, பத்தாண்டுகளில் 20 இலட்சம் எக்டராக அதிகரிக்கப்படும்.

(இ) உணவு தானியங்கள், தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு ஆகிய பணப்பயிர்களுக்கான வேளாண் ஆக்கத்திறனில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகம் இடம் பிடிக்கும்.

பயிர் உற்பத்தித்திறனை அதிகரிக்க, தரமான விதை, நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து, உணவுதானிய பயிர்கள், தென்னை, கரும்பு, பருத்தி, சூரியகாந்தி உள்ளிட்ட பயிர்களில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களில் தமிழ்நாடு இடம் பெற்றிட வழிவகை செய்யப்படும்.

மலையளவு குவிந்திருக்கும் சோற்றையும் ஒவ்வொரு வாயாக உண்டால் தின்றுமுடிக்க முடியும் என்பதுதான் சாத்தியக்கூறு.

மலையளவு தோன்றும் இந்த இலக்குகளை ‘சிறுதுளி பெருவெள்ளம்’ என்கின்ற பொன்மொழிக்கு ஏற்ப பல்வேறு கட்டங்களாக வகுத்தும் பகுத்தும் தொகுத்தும் இந்தத் துறை இந்நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கியிருக்கிறது. அவை:

1. கிராம அளவிலான வேளாண் தொகுப்புத் திட்டம்.
2. மானாவாரி நில மேம்பாடு
3. தரிசு நில மேம்பாடு
4. இயற்கை வேளாண்மை
5. மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை வலுப்படுத்தி, பாசன சாகுபடிப் பரப்பினை அதிகரித்தல்.
6. சிறு குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து கூட்டுப்பண்ணைய முறையை ஊக்குவித்தல்.
7. ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் வேளாண் வருவாயை உயர்த்துதல்
8. சொட்டுநீர், தெளிப்புநீர் பாசனத்தினை விரிவுபடுத்துதல்
9. பயிர் விளைச்சலை அதிகரிக்க பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்களை பரவலாக்குதல்.
10. வேளாண்மையில் மகளிருக்கு முக்கியத்துவம் அளித்தல்.
11. விவசாயிகளை வேளாண் வணிகராக்குதல், இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்.
12. வேளாண்மையில் தகவல் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தி விவசாயிகளுக்கு பகுதிசார்ந்த வேளாண் தகவல் வழங்குதல்.
13. வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்.
14. விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல்.
15. பாதுகாக்கப்பட்ட சூழலில் காய்கறிகள்மலர்கள், உற்பத்தியினை ஊக்குவித்தல்.

16. குறுதானியங்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றுக்கு உகந்த விலை விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்தல்.

வேளாண்மையில் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் ஒருங்கிணைந்த வளர்ச்சியையும் அடையும்பொருட்டு இத்துறை செயல்படுத்தவிருக்கின்ற திட்டங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1. **கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்**

ஐந்து ஆண்டுகளில் தமிழகம் முழுவதிலுமுள்ள அனைத்து கிராமங்களிலும் ஒட்டு மொத்த வேளாண் வளர்ச்சியை உருவாக்கிட அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்புடன் "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" என்ற மாபெரும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். வட்டார அளவில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல்துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, பால்வளத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நீர்வள ஆதாரத்துறை, எரிசக்தித் துறை உள்ளிட்ட துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைப்பதே "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்". இச்சீரிய திட்டத்தின் கீழ், அனைத்து கிராமங்களும், ஒட்டுமொத்த வளர்ச்சியடைந்து, தன்னிறைவு பெற்ற கிராமங்களாக மாற வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் தற்போது, 12,524 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன. இதில் ஒவ்வொரு ஆண்டிலும், ஐந்தில் ஒரு கிராம பஞ்சாயத்தை தேர்வு செய்து, ஐந்தாண்டுகளில் அனைத்து கிராம

பஞ்சாயத்துகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அடுத்த 10 ஆண்டுகளில் 11.75 இலட்சம் எக்டர் தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும் என்ற தொலைநோக்கு திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தினை செயல்படுத்த 36 மாவட்டங்களில் ஆரம்ப கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 19.31 இலட்சம் எக்டர் தரிசு நிலங்கள் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வேளாண்மையை விரிவுபடுத்துவதற்கான அடுத்த நம்பிக்கை, தரிசு நிலங்களே. தரிசு நிலங்களை பரிசு நிலங்கள் ஆக்கி சாகுபடி பரப்பு உயர்த்தப்படும்.

நடப்பு 2021-22 ஆம் ஆண்டில், 2,500 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

திட்டத்தின் நோக்கங்கள்:

- கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வருதல்.
- நீர்வள ஆதாரங்களைப் பெருக்குதல்.
- சூரிய சக்தி பம்பு செட்டுகள் அமைத்தல்
- வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல்.
- நுண்ணீர்ப் பாசன முறையினை பின்பற்றுதல்
- கால்நடைகளின் நலன் காத்து பால் உற்பத்தியைப் பெருக்குதல்.
- வருவாய்த் துறையின் மூலம் புதிய பட்டா / பட்டா மாறுதல் செய்து வழங்குதல்.
- கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிக அளவு பயிர்க் கடன்கள் வழங்குதல்.

- கால்வாய், பாசன நீர் வழித்தடங்களை தூர்வாருதல்

இத்திட்டம் 250 கோடி ரூபாய் செலவில் மாநில நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். மேலும், வேளாண்மைத்துறையின் திட்டங்களுடனும் இதரத்துறைகளின் திட்டங்களுடனும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

## 2. முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்

தமிழகத்தில் பல சிறு குறு வேளாண் பெருமக்கள் மானாவாரி சாகுபடியை மேற்கொண்டு வருகிறார்கள். வானம் பார்த்த பூமியாய் மழைத்துளிகளை எதிர்பார்த்து, கண்ணீர்த் துளிகளைச் சிந்தும், உழவர்களின் இந்த வேதனையைப் போக்க வேண்டும் என்பதே வேளாண் துறையின் முக்கிய நோக்கம். அதற்காக மானாவாரி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழ்நாட்டில் தொகுப்பாக உள்ள மானாவாரி நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, நடப்பாண்டில் 3 இலட்சம் எக்டரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒரு தொகுப்புக்கு 100 எக்டர் வீதம், மானாவாரி நிலங்களைக் கண்டறிந்து, கோடை உழவு மேற்கொண்டு, பண்ணைக்குட்டைகள், வயல்வெளி வரப்புகள் போன்ற மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்கி, ஊட்டச்சத்து மிகுந்த சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்களை சாகுபடி செய்வதற்குத் தேவையான, தரமான விதைகளும் உயிர் உரங்களும் மானிய விலையில் வழங்கப்படும்.

மேலும், இம்மானாவாரி நிலத் தொகுப்புகளில், பயன்தரும் மரக்கன்றுகளை வளர்ப்பதுடன், பண்ணை இயந்திர வாடகை மையங்கள், மதிப்புக்கூட்டும் இயந்திர மையங்களையும் உருவாக்க நிதி உதவி வழங்கப்படும். இத்திட்டத்தில், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் பயன்பெறும் கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் மூன்று இலட்சம் மானாவாரி விவசாயிகள் பயனுறுவார்கள். வறட்சியைத் தாக்குப்பிடிக்கும் புதிய ரகங்களின் மூலமும், மழைநீரைச் சேகரித்துப் பயன்படுத்தும் நுட்பங்கள் மூலமும், மானாவாரி சாகுபடிக்கு உத்தரவாதம் அளிக்கும் பாதுகாப்பான சூழ்நிலை

உருவாக்கப்படும். இத்திட்டம் 146 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**3. இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம்**

அதிக அளவு பயன்படுத்தப்பட்ட இரசாயன உரங்களாலும், பூச்சிக் கொல்லி மருந்துகளாலும் மண்ணிலுள்ள நுண்ணுயிர்கள், மண்புழுக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து மண்வளம் பாதிக்கப்பட்டதோடு சுற்றுப்புறச்சூழலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு பல்வேறு உடல் நல பாதிப்புகள் ஏற்பட்டதால், தற்பொழுது நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கக்கூடிய, இயற்கை வேளாண் விளைபொருட்களின் தேவையும் விழிப்புணர்வும் மிக அதிகமாக ஏற்பட்டுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு, இயற்கை வேளாண்மை தொடர்பான பணிகளை சிறப்புக்கவனத்துடன் செயல்படுத்துவதற்கு, மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் "வேளாண்மைத் துறையில் இயற்கை வேளாண்மைக்கென்று தனிப் பிரிவு" ஒன்று உருவாக்கப்படும், இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இடுபொருள் மானியம் வழங்கப்பட்டு ஊக்கப்படுத்தப்படும்" என்று அறிவித்ததற்கிணங்க, "இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம்" என்ற உன்னதத் திட்டம் நடப்பு 2021-22-ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும்.

இயற்கை வேளாண்மை குறித்த இடுபொருட்கள் இன்றியமையாதவை. அவற்றை வேளாண் கிடங்குகளிலேயே கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகள் செய்யப்படும். தனியார் மூலம் விற்பனை செய்யப்படும் இயற்கை இடுபொருட்களின் தரத்தை உறுதி செய்ய, தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகள் தீவிரமாக அமல்படுத்தப்படும். இயற்கை வேளாண்மை என்கிற பெயரில் செயற்கை உரமிட்டு வளர்த்து, அதிகமான விலைக்கு விற்கப்படும் பொருட்களைக்

கண்காணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இயற்கை எருவைப் பயன்படுத்தும் உழவர்களுடைய கைபேசி எண்களின் மூலம் இயற்கை விவசாயிகளின் பட்டியல் வட்டாரந்தோறும் தயாரிக்கப்படும். அவர்களுக்கு இயற்கை விவசாயிகள் என்கிற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இதைச் செயல்படுத்த, விவசாயிகளுக்கிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அங்கக சான்றளிப்பு குறித்த பயிற்சியும் வழங்கப்படும். இத்திட்டம் 33 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**4. நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்**

‘விதையொன்று போட சுரையொன்று முளைக்குமா’ என்பது ஊரகப் பழமொழி.

தமிழ் இலக்கியங்களில் ‘பள்ளு’ என்கிற இலக்கியங்கள் உழவர்களின் வாழ்க்கை முறையை நாடகப் போக்கில் நல்குபவை. ‘முக்கூடற்பள்ளு’ வில் ஏராளமான நெல்லின் பெயர்கள் காணப்படுகின்றன. முத்துச்சம்பா, பூஞ்சாலி, பூம்பாளை, வெள்ளச்சம்பா, மறுவள்ளிச்சம்பா, நீலச்சம்பா, வில்லூன்றிச்சம்பா, கடுக்கன்சம்பா, கதலிவாழை, சித்திரக்காலி, மணல்வாரி, செஞ்சம்பா, சீரக சம்பா என்பன அவற்றுள் சில.

அதைப்போலவே ‘செங்கோட்டுப்பள்ளு’ எனும் நூலில் 32 சம்பா நெற்பெயர்கள் காணப்படுகின்றன.

தமிழகத்தின் பாரம்பரிய நெல் வகைகளைத் திரட்டி, பாதுகாத்து, பார்வைக்குட்படுத்தி பேணிக் காக்கிற பெரும் பொறுப்பு இத்துறைக்கு உள்ளது. அவற்றை திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, திருப்பூர், திருச்சி, புதுக்கோட்டை,

தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருவாரூர், தேனி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள அரசு விதைப்பண்ணைகளில் 200 ஏக்கர் பரப்பளவில் விதை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டம் 25 இலட்சம் ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**5. இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்**

தமிழகத்தில் எண்ணற்ற இளைஞர்கள் வேளாண் கல்வியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்கள் அனைவரும் வேலை பெறுவோராக இல்லாமல், வேலை தருவோராக மாறும்போதுதான் வேளாண் துறையில் முன்னேற்றம் முயல் வேகத்தில் நிகழும். அதை மனதில் கொண்டு, வேளாண் பட்டதாரிகளைத் தொழில்முனைவோராக ஆக்குவதில் இவ்வரசு தீவிர கவனம் செலுத்தும். இதற்காக, பட்டப்படிப்பிலேயே வேளாண் தொழில்முனைவோர் ஆவதற்குத் தேவையான பயிற்சிகள், வேளாண் வணிக நிறுவனங்களின் ஒத்துழைப்போடும், முன்னாள் மாணவர்களின் பங்களிப்போடும் நிகழ்த்தப்படும். இறுதி ஆண்டு படிக்கும்போதே அவர்களுக்குள் தொழில்முனைவோர் ஆக வேண்டும் என்கிற தணியாத தாகம் உருவாக்கப்படும். அவர்கள் இன்று சந்தையிலிருக்கும் இடைவெளிகளை எல்லாம் தெரிந்துகொண்டு, சொந்தத் தொழில் தொடங்குவதில் உள்ள நெளிவுசுளிவுகளை அறிந்துகொண்டு படிப்பை முடித்து வெளிவருகிறபோதே சான்றிதழைக் கைகளிலும், செயல் திட்டத்தை இதயத்திலும் தாங்கி வெளிவருவார்கள். வேளாண் துறை நடைமுறையில் சந்திக்கும் சவால்கள் அவர்களால் பெருமளவு தீர்க்கப்படும்.

மேலும், இயற்கை எரு தயாரித்தல், மரக்கன்றுகள் வளர்ப்பு, நாற்று வளர்ப்பு, காளான் வளர்ப்பு, பசுமைக்குடில் அமைத்தல், பண்ணை இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல், உரம்-

பூச்சிமருந்து விநியோகம், வேளாண் ஆலோசனை மையம் (Agri Clinic), நுண்ணீர்ப்பாசன சேவை மையம், விளைபொருட்கள் ஏற்றுமதி, வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் போன்ற தொழில்களைச் செய்திடவும் வழிவகை செய்யப்படும். இந்த இளைஞர்கள் தங்கள் கல்வி அறிவைக்கொண்டு தரிசு நிலங்களிலும், மானாவாரி நிலங்களிலும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதிகமான மகசூல் காண முற்படுவதோடு விவசாயிகளின் எளிதில் அழுகக்கூடிய விளைபொருட்களை நியாயமான விலையில் கொள்முதல் செய்து நுகர்வோர்களுக்கு பச்சைப் பசேலாக விநியோகிக்கவும் ஊக்குவிக்கப்படுவார்கள்.

இத்திட்டம் 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**6. ஊரக இளைஞர் வேளாண் திறன் மேம்பாட்டு இயக்கம்**

இளைஞர்கள் கைகளில் மண் படாமல் வேலை செய்ய விரும்பும் மனநிலை ஊரகப் பகுதிகளிலும் ஊடுருவி விட்டது. படித்தவர்களும் பட்டம் பெற்றவர்களும் அலுவலகப் பணியை அதிகம் விரும்புவதும் வரப்புகளையும் வயல்களையும் விட்டு விலகிச் செல்வதையும் காண்கிறோம். அவர்கள் நகர்ப்புரங்களில் குடியேறுவதால் தூய காற்றைக்கூட சுவாசிக்க முடியாமல் துயர்வுறுகிறார்கள். மண்ணுக்கும் அவர்களுக்குமான தொடர்பு முற்றிலுமாக அற்றுப்போய் விடுகிறது. அடுத்த தலைமுறைக்கு கணினியைப் பற்றித் தெரியும் அளவுக்கு கழனியைப் பற்றித் தெரியாமல் போய்விடுகிறது. எனவே முப்போகம் விளைந்த நிலங்கள் தரிசாக தரம் கெட்டுப் போய்விடுகின்றன. வேளாண்மை என்பது உன்னதமான தொழில் என்கின்ற உணர்வை அனைவர் உள்ளங்களிலும் ஊட்டி, அதை மீண்டும் பழைய நிலைக்கு மீட்டெடுக்கும் முயற்சியில் தமிழக அரசு முழுவதுமாக ஈடுபடும்.

அதுகுறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அனைத்து ஊடகங்களின் வாயிலாகவும் நிகழ்த்துவதற்குப் பாடுபடும். அதன் மூலம் படித்த இளைஞர்கள் சொந்த ஊரிலேயே வேளாண்மையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்ல 'ஊரக இளைஞர் வேளாண் திறன் மேம்பாட்டு இயக்கம்' என்ற திட்டம் செயல்படுத்தப்படும்.

முதற்கட்டமாக, இந்த ஆண்டு 2,500 இளைஞர்களுக்கு ஒட்டுக்கட்டுதல், பதியன் போடுதல், கவாத்து செய்தல், பசுமைக் குடில் பராமரித்தல், நுண்ணீர்ப் பாசன அமைப்பு பராமரித்தல், தோட்டக்கலை இயந்திரங்கள் இயக்குதல், வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்குதல், சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளைப் பழுது நீக்குதல் போன்றவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், திறன்மேம்பாடு அடைந்த இளைஞர்களுக்கு, வேளாண் திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 7. பனை மேம்பாட்டு இயக்கம்

பனை நம் மாநில மரம். வரலாற்றின் தொடர்ச்சியான எழுத்துப் பதிவு கொண்ட மரம். அழகர் மலையில் உள்ள கல்வெட்டில் 'பாணித வாணிகன் நெடுமலன்' என்ற குறிப்பு இருக்கிறது. 'பாணிதம்' என்பது பனையின் பதநீரைக் காய்ச்சி உருவாக்கும் இனிப்பான பாகைக் குறிக்கும் சொல்லாகும்.

பனை மரம் அனைத்து பாகங்களையும் மானுடத்திற்குக் கொடையாய் அளிக்கும் அற்புதத் தரு. அதன் குருத்தோலை தோரணம் கட்டவும், அழகியல் பொருட்கள் செய்யவும் பயன்படுகிறது. சாரை ஓலை கூடை, பாய் செய்ய உதவுகிறது. பச்சை மட்டை வேலி அமைக்கவும், நார் எடுக்கவும் உதவுகிறது. பனங்காய் நுங்கும், பனம்பழமும் தருகிறது. பனங்கொட்டை கிழங்காக மாறி உண்ணப்

பயன்படுகிறது. பாளை பதநீர் பெற உபயோகமாகிறது. ஓலை கூரை வேயவும், பதநீர், கஞ்சி போன்றவற்றை ஊற்றிக் குடிக்கவும் பயன்படுகிறது. உச்சிப்பகுதி மரத்தொட்டி செய்ய உதவுகிறது. பத்தை மட்டை தும்பு எடுக்கவும், தரை தேய்க்கும் பிரஷ் செய்யவும் பயன்படுகிறது. நடு மரம் உத்தரம் செய்ய உதவுகிறது. தூர்ப்பகுதி வட்ட வடிவிலான பத்தலாக பயன்படுகிறது. வேர் மழைக்காலங்களில் நிகழும் மண்ணரிப்பைத் தடுக்க பயனுள்ளதாக இருக்கும்.

பனை மரத்தில் உள்ள ஒரு வகைப் பனை, கூந்தல் பனை என்பது. அதை தாளிப்பனை என்றும் அழைப்பார்கள். விசிறிப்பனை என்கிற பெயரும் உண்டு. தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் பயிரிடப்பட்ட பனையாகும். கடற்கரைப் பகுதிகளில் அதிகம் வளரும் பனை. அதன் ஓலைகள் மிருதுவாகவும், வெளிறியும் காணப்படும். அப்பனை ஓலையை எழுதப் பயன்படுத்தினார்கள். தமிழர்கள் பனை ஓலையைப் பயன்படுத்தியதை அல்புரூனி தன்னுடைய பயணக்குறிப்பில் குறிப்பிடுகிறார். அரசு நிர்வாகத்தில் ஓலைநாயகம் என்பவர் இருந்திருக்கின்றார். பனை ஓலையின் மற்றொரு பெயராக ‘மடல்’ என்ற சொல்லும் உண்டு.

தமிழ்நாட்டில் பனைமரத்தின் பரப்பு வெகுவாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு தற்போதுள்ள பனைமரங்களைப் பாதுகாப்பதுடன், கூடுதலாக பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, நடப்பாண்டில் 30 மாவட்டங்களில், 76 இலட்சம் பனை விதைகளையும், ஒரு இலட்சம் பனங்கன்றுகளையும் முழு மானியத்தில் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும். ஏரிக் கரைகளிலும் சாலையோரங்களிலும் பனைமரங்களை வளர்ப்பதற்கு மீண்டும் முயற்சிகள் எடுக்கப்படும். இன்று மக்கள் அதிகம் விரும்பும் பொருட்களாக பனங்கற்கண்டு, பதநீர், கருப்பட்டி போன்றவை விளங்குகின்றன. அவற்றைக்

கலப்படமில்லாமல் மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தால் மிகுந்த வரவேற்பைப் பெறும். இத்துறை பனைமரங்களைப் போற்றிக் காக்கும் உன்னதப் பணியை உன்னிப்பாக மேற்கொள்ளும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பனைமரம் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

பனை வெல்லம் உற்பத்தி தொடர்பான நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்கு விவசாயிகளுக்கு உரிய பயிற்சியும், பனங்கருப்பட்டி காய்ச்சும் நவீன இயந்திரம் கொள்முதல் செய்திட மானியமும் வழங்கப்படும்.

மேலும், பனை மரத்திலிருந்து எடுக்கப்படும் மதிப்புக்கூட்டுப்பொருளான பனை வெல்லத்தினை பனை வாரியம், வேளாண் கூட்டுறவு சங்கங்களுடன் ஒருங்கிணைந்து நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழர்களின் வாழ்வோடும், மொழியோடும், வளத்தோடும், ஒன்றுபட்டு, மழை ஈர்ப்பு மையம், நீர் நிலைகளின் காவலன் என்றும் அழைக்கப்படும் பனை மரத்தினை, வேரோடு வெட்டி விற்கவும், செங்கல் சூளைகளுக்குப் பயன்படுத்தும் செயலினைத் தடுக்க இவ்வரசால் உத்தரவு பிறப்பிக்கப்படும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பனைமரங்களை வெட்ட நேரும் நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சியர் அனுமதி பெறவேண்டியது கட்டாயமாக்கப்படும். பனை மேம்பாட்டு இயக்கம் 3 கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 8. நெல் உற்பத்தி சிறப்புத் திட்டம்:

‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்ற மணிமேகலை காப்பியப்பாடலுக்கு ஏற்ப, பெருகிவரும் மக்கள் தொகைக்குத் தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்கி பசிப்பிணி மருத்துவராகச் செயல்படும் உழவர்கள் அயராது உழைத்து, உற்பத்தி செய்து வழங்கி வருகின்றனர்.

‘தன்னிறைவு,

மிகை உற்பத்தி,

ஊட்டச்சத்து பாதுகாப்பு’

என்ற நோக்கத்துடன், உணவு தானிய உற்பத்தியில் நடப்பாண்டு 125 இலட்சம் மெட்ரிக் டன் என்ற இலக்கினை எய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் முதன்மைப்பயிரான நெற்பயிரின் உற்பத்தியினை அதிகரித்திட, 19 இலட்சம் எக்டரில் சாகுபடி மேற்கொண்டு சுமார் 75 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி இலக்கினை அடைந்திட திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

நடப்பாண்டில் மேட்டூர் அணை ஜூன் 12 ஆம் தேதி அன்று திறப்பதற்கு முன்பே விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து இடுபொருள்களும் இருப்பு வைத்து விநியோகம் செய்யப்பட்டன. குறுவை நெல் சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் வகையில் 61 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் குறுவை நெல் சாகுபடித் தொகுப்புத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், அறுவடை பின்செய் இழப்புகளை குறைக்க விவசாயிகளுக்கு தார்பாய்கள் வழங்கப்படும். இத்திட்டம் 52 கோடியே

2 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

2021-22 ஆம் ஆண்டிற்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக குவிண்டாலுக்கு, நெல் சன்னரகத்திற்கு ரூ.1960-ம் சாதாரண ரகத்திற்கு ரூ.1940-ம் என ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு, நடப்பு ஆண்டில் கொள்முதல் விலையை உயர்த்தி, அதாவது குவிண்டாலுக்கு சன்னரகத்திற்கு ரூ. 70/- லிருந்து ரூ.100/- ஆகவும் சாதாரண ரகத்திற்கு ரூ. 50/- லிருந்து ரூ.75/- ஆகவும் ஊக்கத் தொகையினை நிர்ணயித்து கொள்முதல் செய்திடும். இதனால் ஒரு குவிண்டால் நெல் சன்னரகம் ரூ.2060/- ஆகவும், சாதாரண ரகம் ரூ2015/- ஆகவும் கொள்முதல் செய்யப்படும். இதன் வாயிலாக சுமார் ஆறு இலட்சம் விவசாயிகள் பயனடைவர். இதனால் அரசுக்குக் கூடுதலாக 99 கோடியே 38 இலட்சம் செலவு ஆகும்.

### 9. சிறுதானிய இயக்கம்

தினை மாவையும், தேனையும் தமிழக மக்கள் ருசித்து உண்டதாக தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. சிறுதானியங்களும், குறுதானியங்களும் அதிக இடுபொருட்கள் இன்றி உருவாகும் இயல்பு கொண்டவை. மழை பொய்த்தாலும் அவை பொய்க்காது என்கிற தன்மை கொண்டவை. அவை அதிக நேரம் பசியைத் தாக்குப்பிடிக்கும் ஆற்றல் உள்ளவை. நீரிழிவு, ரத்தக்கொதிப்பு உடையோருக்கு அவை ஏற்ற உணவாக இருக்கின்றன. காலப்போக்கில் அரிசியின் பயன்பாடு அதிகரித்ததால் அவை நம் மண்ணைவிட்டு மறையத் தொடங்கின. அதன் காரணமாக ஊரகப் பகுதிகளிலும் அவற்றை உண்பவர்கள் குறையத் தொடங்கினார்கள். ஆனால் அண்மைக் காலமாக சிறுதானியங்களையும், குறுதானியங்களையும் மக்கள் விரும்பி உண்ணும் நிலை

உருவாகிவிட்டது. அரிசி போன்றவற்றில் உற்பத்தி செய்யக்கூடிய உணவு வகைகளை சிறுதானியங்களிலேயே செய்யும் சமையல் முறைகள் வந்துவிட்டன. பல பெருநகரங்களில் சிறுதானியத்திற்கென்றே உணவகங்கள் இருக்கின்றன.

மழை அதிகம் பொழியாத இடங்களில் வேளாண் பெருமக்களுக்கு சிறுதானியங்களை வளர்க்க பயிற்சியும், அவற்றைச் சந்தைப்படுத்த வசதிகளும் செய்துதரப்படும். அதன் மூலம் மீண்டும் தாராளமாக அவை கிடைக்கும் நிலை உருவாகும்.

ஊட்டச்சத்து மிகுந்த கம்பு, கேழ்வரகு, வரகு, தினை, குதிரைவாலி, சாமை போன்ற சிறு, குறு தானிய பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், மானாவாரி நிலங்களில் சாகுபடியினை அதிகரிக்க, தரமான விதை விநியோகம், இயந்திர விதைப்பு, உயிர் உரங்கள் பயன்பாடு போன்ற உயர்விளைச்சல் உத்திகளைக் கொண்டு "சிறுதானிய இயக்கம்" கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்தப்படும்.

மேலும், குறுதானியங்களை மதிப்புக்கூட்டி விற்பனையை ஊக்குவித்து, விவசாயிகளுக்கு உரியவிலை கிடைத்திட குறுதானிய அரிசியை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்து சென்னை, கோயம்புத்தூர் போன்ற மாநகரங்களில் பொது விநியோகத்திட்டத்தின் கீழ், வழங்கிடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி பகுதி பழங்குடியின விவசாயிகள் உற்பத்தி செய்யும் சிறு தானியங்களுக்கென பதப்படுத்தும் மையமும் அமைக்கப்படும்.

சிறுதானிய இயக்கம் 12 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**10. பலன் தரும் பயறு உற்பத்தி திட்டம்**

சைவ உணவை மட்டுமே உண்பவர்களின் புரதத்தேவையைப் பயறு வகைகள்தான் தீர்த்து வைக்கின்றன. எனவே, இந்தியாவின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பயறுவகைகளின் உற்பத்தி மிகவும் முக்கியம். தமிழகத்தைப் பொருத்தவரை அனைத்து உணவு வகைகளிலும் பயறு வகைகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. எனவே தவிர்க்க முடியாத பயிராக பயறு விளங்குகிறது. அதிகம் இறக்குமதி செய்யவும் இயலாத சூழல் பயறு வகைகளில் காணப்படுகிறது.

நஞ்சை நிலங்களில், நெல்லை அறுவடை செய்வதற்குப் பத்து நாட்கள் முன்பே பயறு வகைகளை விதைக்கிற பழக்கம் சங்க காலத்திலேயே இருந்திருக்கிறது என்று தெரிய வருகிறது. சங்க இலக்கியங்களில் 'தினையரிந்த பின் விதைத்த அவரை வளர்ந்து காய்க்கும்' என்று ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது. காவிரி நீர்ப்பாசன பகுதிகளில் நெல்தரிசில் பயறு வகைகள் ஒரு காலத்தில் அதிகம் சாகுபடி செய்யப்பட்டன. அவற்றை மீண்டும் ஊக்குவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

பயறு வகைகளின் மகசூல் குறைவாக இருப்பதாலும் பெரும்பாலும் அவை தரிசு நிலங்களிலேயே பயிரிடப்படுவதாலும், போதிய அளவு நமக்கு அவை விற்பனைக்குக் கிடைப்பதில்லை. இதை மாற்றும் நோக்கத்துடன், அதிக மகசூல் கொடுக்கக்கூடிய புதிய ரகங்களை நாம் கண்டுபிடிக்கும் முயற்சிகளுக்கு அதிகம் முன்னுரிமை அளிக்கவேண்டும். பயறு வகைகளை நெல் விவசாயிகள் வரப்புகளில் வளர்க்கவும், ஊடுபயிராக வளர்க்கவும், கலப்புப் பயிராக வளர்க்கவும் விதை மானியம் போன்றவை அளித்து ஊக்கப்படுத்தப்படும்.

இத்தகைய புரதச்சத்து மிகுந்த பயறுவகைகளை கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் கொள்முதல் செய்து பொது விநியோக முறையிலும், மதிய உணவுத் திட்டத்திலும் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அறுவடைக் காலங்களில் விளைபொருட்களின் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். நடப்பாண்டில் இத்திட்டத்தின் கீழ், துவரை, உளுந்து, பச்சைப்பயறு போன்ற பயறு வகைகளை 61,000 மெட்ரிக் டன் அளவிற்கு கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அரசின் இச்செயல்பாடானது, பயறு வகைகளுக்கான வெளிச்சந்தை விலையினை நிலைப்படுத்துவதுடன், விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கவும் உறுதுணை புரியும். இத்திட்டம் 45 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**11. ஏற்றம் தரும் எண்ணெய்வித்துக்கள் திட்டம்**

நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு பயிர்களில் உற்பத்தியினை அதிகரித்திட, தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருதல், நெல் தரிசில் எள், ஆமணக்கு பயிரை தனிப்பயிராக பயிரிடுவதற்கான சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 25 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 12. நீடித்த நிலையான பருத்தி இயக்கம்

'வெள்ளைத் தங்கம்' என்று அழைக்கப்படும் பருத்திப் பயிரானது, தமிழ்நாட்டில் உள்ள 2013 நூற்பாலைகளுக்கு மூலப்பொருளை வழங்குகிறது. நடப்பாண்டில் 1.7 இலட்சம் எக்டரில் பருத்தி சாகுபடியை மேற்கொண்டு, சுமார் நான்கு இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்யவும், சந்தை விலை குறையும்போது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இந்திய பருத்திக் கழகத்தால் பருத்தி கொள்முதல் செய்திடவும், அதிக அளவு சந்தைத் தேவையுள்ள நீண்ட இழை பருத்தி சாகுபடி, ஒருங்கிணைந்த உத்திகளை 25,000 எக்டரில் செயல்படுத்தவும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

தற்போது ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு வரும் பருத்தி, அந்தந்தப் பகுதி வியாபாரிகளால் விதையோடு கொள்முதல் செய்யப்படுகிறது. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், கடலூர் ஆகிய மாவட்ட ஒழுங்குமுறைக்கூடங்களில் பருத்தி வரத்து அதிக அளவில் உள்ளதால், இப்பகுதி பருத்தி விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பருத்தியில் விதை நீக்கி, தரம் பிரித்து, ஈரப்பத அளவு, பருத்தியின் தன்மை, தரக்குறியீடு ஆகியவற்றை மதிப்பீடு செய்து விற்பனை செய்வதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

நடப்பாண்டில், பருத்தி வரத்து அதிகம் உள்ள திருவாரூர் பகுதி விவசாயிகள் பயனடைவதற்காக, திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நாளொன்றுக்கு 50 மெட்ரிக் டன் திறனுள்ள பருத்தி விதை நீக்கும் இயந்திரம் நிறுவப்படும். டெல்டா மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு பருத்தி வரத்து அதிகமுள்ள நாட்களில், வாரத்துக்கு இருநாட்கள் பருத்தி கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டம் 16

கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**13. சீர்மிகு தென்னை சாகுபடி**

தென்னை விவசாயிகளின் நலன் காக்க இவ்வரசு நடப்பாண்டில் பல்வேறு பணிகளை மேற்கொள்ளும். தென்னையில் உற்பத்தித்திறனை அதிகரிக்க 'ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாக சிறப்புத் தொகுப்புத் திட்டம்' செயல்படுத்தப்படும். 'தேரோடத் தென்னை' என்ற அடிப்படையில் தென்னந் தோப்புகளில் அதிக இடைவெளி உள்ளது. மரங்களுக்கிடையே உள்ள இடைவெளியை திறம்பட பயன்படுத்த, பல்லடுக்கு சாகுபடி விவசாய முறை (Multi-tier Cropping System) மூலம் தீவனப்புல் உட்பட பலவகைப் பயிர்களை சாகுபடி செய்து ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வருவாய் ஈட்டுவதற்கு திட்டம் செயல்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டில் தென்னை சாகுபடிப் பரப்பினை அதிகரிப்பதற்காக 17 இலட்சம் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும். தென்னந்தோப்புகளில் பாசன நீர் பற்றாக்குறையினைப் போக்குவதற்கு சொட்டு நீர்ப் பாசன முறை நடப்பாண்டில் 20,000 எக்டரில் நிறுவப்படும்.

பட்டுக்கோட்டையில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் துணை மண்டல மையம் அமைக்க ஒன்றிய அரசுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். டெல்டா மாவட்ட தென்னை விவசாயிகளின் நலனுக்காகத் தென்னை மதிப்பு கூட்டும் மையம் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைக்கப்படும்.

தென்னையில் பாதிப்பினை ஏற்படுத்தும் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈயின் தாக்குதலை கட்டுப்படுத்திட ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் 10

கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் மாநில, ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**14. அண்ணா பண்ணை மேம்பாடு:**

'உழைத்து வாழ்பவனே

வணங்கத்தக்கவன், வாழ்த்துக்குரியவன்

அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது

சமுதாயத்தின் நல்வாழ்வையே

புரையோடச் செய்வதாகும்'

என்ற அறிஞர் அண்ணாவின் பொன்மொழிக்கேற்ப, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை அருகே சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் 1967ஆம் ஆண்டு அண்ணா பண்ணை தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்த அண்ணா பண்ணை, அனைத்து விவசாயிகளும் பயன் பெறும் வகையில் அண்ணா பன்முக வேளாண் செயல்விளக்க விதைப்பண்ணையாக தற்போது மேம்படுத்தப்படும். வேளாண், தோட்டக்கலைப் பயிர்களில் பாரம்பரிய, நவீன வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கும் வகையில், செயல் விளக்கத்திடல்கள் அமைக்கப்படும். தோட்டக்கலைத்துறையின் மூலம், தோட்டக்கலை நடவுப்பொருட்கள் உற்பத்தி மேற்கொள்ளப்படும். இத்திட்டம் 21 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 15. கூட்டுப் பண்ணையத் திட்டம் (Collective Farming)

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பதற்கேற்ப, சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், கூட்டுப்பண்ணையத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் விவசாயிகளை ஒருங்கிணைத்து, 1,100 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைத்து, வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ஒரு குழுவிற்கு ரூபாய் 5 இலட்சம் வீதம் மூலதனநிதி வழங்கப்படும்.

விவசாய விளைபொருட்களை அருகிலுள்ள பெருநகரச் சந்தைகளுக்கு எடுத்துச்சென்று இலாபகரமாக சந்தைப்படுத்துவதற்கு சிறிய இலகுரக சரக்கு வாகனங்கள் வாங்குவதற்கும் இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டம் 59 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 16. அதிக வருமானம் தரும் ஒருங்கிணைந்த பண்ணையம் (Integrated Farming System)

விவசாய பெருங்குடி மக்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பையும், குறைந்த முதலீட்டில் அதிக வருமானமும் தரும் ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் வேளாண்மை, தோட்டக்கலைப் பயிர் சாகுபடியுடன், கறவை மாடுகள், ஆடுகள், நாட்டுக் கோழிகள், தீவனப்பயிர்கள், பயன் தரும் மரக்கன்றுகள், தேனீ வளர்ப்பு, ஊட்டச்சத்து காய்கறித் தோட்டம் ஆகிய பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக, நடப்பாண்டில் 13,300 விவசாயக் குடும்பங்கள் பயனடையும் வகையில், ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 59 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 17. உழவர்நலன் காக்க வேளாண் மண்டலக் குழுக்கள்

மாவட்டங்களில் உள்ள நீர் ஆதாரம், நிலவளம், நிலவும் தட்பவெப்பம், இயற்கை பாதிப்புகள் உள்ளிட்ட சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, விவசாயிகளை இயற்கை பேரிடர்களிலிருந்து பாதுகாத்திட, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், நீர்வள ஆதாரத்துறை, மாசு கட்டுப்பாட்டு வாரியம், வனத்துறை ஆகிய துறைகளை சார்ந்த அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள், சுற்றுச்சூழல் வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, வேளாண் மண்டல குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்கள் தங்கள் மண்டலத்திற்கு உட்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் நலத்தையும் காக்க உரிய ஆலோசனைகளையும் வழங்கும்.

## 18. மாநில அளவில் மரபுசார் வேளாண்மைக்கான அருங்காட்சியகம் அமைத்தல்

மாநகரத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் வேளாண்மையைப் பற்றி அறியாமலேயே வாழ்ந்து முடிந்து விடுகிறார்கள். மண்ணில் பாதம் படாமலேயே அவர்களுடைய நகர வாழ்க்கை நகர்ந்து விடுகிறது. உழவர்களைப் பற்றிய உண்மைகளையும் வேளாண்மையின் மகத்துவத்தைப் பற்றியும் அவர்கள் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். அப்போதுதான் நெல்மணிகள் கண்மணிகளைப்போல காப்பாற்றப்பட வேண்டியவை என்பதை அறிவார்கள். உணவை வீணடிக்கும் பழக்கம் குறையும். நமது வேளாண்மையின் பெருமையை இளம் சந்ததியினர் தெரிந்து கொள்வதற்காக, வேளாண்மைக்கென தனியாக ஓர் அருங்காட்சியகம் சென்னையில் அமைக்கப்படும்.

இவ்வருங்காட்சியகத்தில் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள நெல் வகைகள், மண் சார்ந்த வேளாண் கருவிகள், பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட உரல், உலக்கை, அரவை இயந்திரம் போன்ற

சாதனங்கள், தமிழகத்தின் பாரம்பரிய கால்நடைகள் - ஆடுகள், செம்மறிகள், கோழிகள், நாய்கள் போன்றவற்றின் புகைப்படங்கள், வேளாண்மை குறித்து இலக்கியத்தில் இடம்பெற்றிருக்கும் காட்சிகளை ஓவியங்களாகப் பார்வைக்கு வைத்தல், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போன்ற நில அமைப்புகளை மாதிரிப்படுத்துதல், ஊட்டச்சத்து மிகுந்த உள்ளூர் பயிர் இரகங்கள், நீர்ப்பாசன மேலாண்மை அமைப்புகள், வேளாண் கருவிகள், இயந்திரங்கள், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் போன்றவை காட்சிப்படுத்தப்படும்.

இதன்மூலம், நமது பாரம்பரிய வேளாண் தொன்மையை இளம்சந்ததியர்கள் எளிதாக அறிந்துகொள்ள முடியும். இந்த அருங்காட்சியகத்தில் நாட்டுப்புறப் பாடல்கள், நாற்று நடும்போது பாடப்படும் பாடல்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு காணொலிகளும் அமைக்கப்படும். இத்திட்டம் 2 கோடி ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 19. விவசாயத்திற்கான இலவச மின்சாரம் வழங்குதல்

வளமான விவசாயத்திற்கு பாசனநீர் மிகவும் முக்கியமானதாகும், தமிழ்நாட்டில், கிணற்று, ஆழ்துளைக் கிணற்று நீரினை பம்புசெட்டுகள் மூலம் பாசனத்திற்கு பயன்படுத்திட மின்சாரம் இன்றியமையாதது. இதற்காக, சுமார் 22 இலட்சத்து 19 ஆயிரம் மின்மோட்டார்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. பயிர் சாகுபடியில், விவசாயிகள் படும் இன்னல்களை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தொடர்ச்சியாக உதவும் வகையில், சராசரியாக, ஒவ்வொரு பம்ப்செட்டுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.20,000/- ஐ அரசே விவசாயிகள் சார்பாக மின்வாரியத்திற்கு செலுத்துகிறது. இதற்கு இந்தாண்டு 4508 கோடியே 23 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. வேளாண் பணிகளை எளிதாக்க அரை இலட்சம் உழவர்களுக்கு வேளாண் கருவிகள் வழங்குதல்

அன்றாட விவசாயப் பணிகளை எளிதாக மேற்கொள்ளத் தேவைப்படும் மண்வெட்டி, களைக்கொத்து, இரும்புச்சட்டி, கடப்பாரை, கதிர் அரிவாள் அடங்கிய "வேளாண் உபகரணங்கள் தொகுப்பு" அரை இலட்சம் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படும். இத்திட்டம் 15 கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 21. வேளாண்மையில் சிறப்பாக செயலாற்றும் விவசாயிகளுக்கு பரிசு

இயற்கை வேளாண்மை, விளைபொருள் ஏற்றுமதி, வேளாண்மையில் புதிய உள்ளூர் கண்டுபிடிப்புகள் போன்றவற்றில் சிறந்து விளங்கும் விவசாயிகளை இந்த அரசு ஊக்குவித்து பரிசளிக்கும். இதன் தொடர்ச்சியாக, பாரம்பரிய முறையில் இயற்கை வேளாண்மை முறையைப் பின்பற்றி அதிக உற்பத்தியைப் பெறும் விவசாயிகளையும், வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் ஏற்றுமதியாளர்களையும் அரசு பரிசளித்து சிறப்பிக்கும். அதேபோன்று, உள்ளூர்ப் புதிய விவசாய தொழில்நுட்பங்களையும் இயந்திரங்களையும் கண்டுபிடிக்கும் விவசாயிகளை ஊக்குவித்து பரிசு வழங்கும். இதற்காக மாநில அரசு ஆறு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி உள்ளது.

## 22. மாநில அளவிலான வேளாண் உயர்நிலைக் குழு

வேளாண் தொடர்பான பல்வேறு முக்கியப் பணிகளை ஆய்வு செய்யவும், சந்தை விலை, இயற்கைச் சீற்றத்தினால் பயிர் சேதம், இடுபொருள் கொள்முதல், விநியோகம், வருங்காலத்தில் எதிர்பார்க்கும் விளைபொருள் உற்பத்தியையும் தேவையையும் கணித்தல் போன்ற விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மாநில அளவிலான வேளாண் உயர்நிலைக் குழு ஒன்று தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்படும். இந்தக் குழு

மாதந்தோறும் வேளாண்மைத் துறை, வேளாண்மை சார்ந்த துறைகளான உணவுத் துறை, கால்நடை பராமரிப்பு துறை, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நீர்வள ஆதாரத் துறை, சர்க்கரைத் துறை ஆகிய துறைகள் சார்ந்த செயலாளர்களுடனும், துறைத் தலைவர்களுடனும் கூட்டம் நடத்தி, உரிய தீர்வு காண வழிவகை செய்யப்படும்.

**23. ஏரிகளிலும் குளங்களிலும் படிந்திருக்கும் வண்டல் மண்ணை விவசாயிகள் பயன்படுத்தி மண்வளத்தை உயர்த்துவதற்கான விழிப்புணர்வு**

'ஆற்று வண்டல் தேற்றும் பயிரை' என்பார்கள். இதற்கென தற்போது, ஏரிகள், குளங்களில் படிந்திருக்கும் வண்டல் மண்ணை விவசாயிகள் பயன்படுத்தும் வகையில், மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று எடுத்துக் கொள்ள தொழில்துறை, நீர்வள ஆதாரத் துறையின் ஒத்துழைப்புடன், விவசாய நிலங்களின் வளத்தை உயர்த்தும் வகையில், விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மாவட்ட ஆட்சியர், தொடர்புடைய துறைகளின் ஒத்துழைப்புடன் இப்பணியினை திறம்பட மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம், விவசாய நிலங்களின் வளம் கூடி, மகசூல் அதிகரிப்பதுடன், ஏரிகள், குளங்களின் நீர் சேமிக்கும் திறனும் அதிகரிக்கும்.

**24. பயிர் காப்பீட்டுத் திட்டம்**

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களினால், பயிர் சேதம் ஏற்படும் போது, விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் பயிர்க்காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்ற காரீப் 2020 பருவத்திற்கு இதுவரை சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 107 கோடியே 54 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. சிறப்புப்

பருவத்திற்கு காப்பீட்டு கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்காக 304 கோடியே 23 இலட்சம் ரூபாய் முதல் தவணையாக காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. தற்போது இரண்டாவது தவணையாக 1248 கோடியே 92 இலட்சம் ரூபாய் தொகையினை விரைவில் காப்பீட்டு நிறுவனங்களுக்கு விடுவித்து, சென்ற ஆண்டில் சம்பா நெற்பயிருக்கான இழப்பீட்டுத் தொகை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கிடைக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

பயிர்க்காப்பீட்டுத் திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணத்தொகையில் ஒன்றிய அரசு தனது பங்கை குறைத்து விட்டதால், மாநில அரசின் பங்கு கணிசமாக அதிகரித்துள்ளது என்றும் கடும் நிதி நெருக்கடியுள்ள நிலையில் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவது மிகவும் சவாலாகவும் கடினமாகவும் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் காப்பீட்டுக் கட்டண மானிய விகிதத்தினை மீண்டும் மாற்றி நிர்ணயிக்கும்படி, கோரியுள்ளார்.

எனினும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, 2021-2022 ஆம் ஆண்டில், பயிர் காப்பீட்டு திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவெடுத்து, இதற்காக **2327 கோடி ரூபாய் நிதி** ஒதுக்கீடு செய்துள்ளது.

**25. கரும்பு உற்பத்திக்கான ஊக்கத்தொகை**

தமிழ்நாடு அரசு கரும்பு (கொள்முதல் விலை முறைப்படுத்துதல்) சட்டம், 2018 -ன் படி, 2017-18 அரவைப் பருவம் முதல், மாநில அரசு பரிந்துரை விலை நிர்ணயம் செய்யும் முறை இல்லாமல் வருவாய் பகிர்மான அடிப்படையிலான கரும்பு விலை நிர்ணய முறை செயல்பாட்டில் உள்ளது. இச்சட்டத்திற்கான விதிகள் வகுக்கப்பட்டு

வரும் நிலையில், கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மேற்படி சட்டத்தை நடைமுறைப்படுத்தும் வரை கரும்பு விவசாயிகள் 2016-17 அரவைப் பருவத்தில் பெற்ற கரும்பு விலையான டன் ஒன்றுக்கு ரூ. 2,750/- க்கு குறையாமல் பெறுவதை உறுதி செய்யும் பொருட்டு ஒன்றிய அரசு அறிவிக்கும் நியாயமான ஆதாய விலைக்கும் கரும்பு விவசாயிகள் 2016-17 அரவைப் பருவத்தில் பெற்ற கரும்பு விலையான ரூ.2750/-க்கும் உள்ள வித்தியாசத் தொகையை கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக அரசு வழங்கி வருகிறது.

இதன்படி, 2020-21-அரவைப் பருவத்திற்கு கரும்பிற்கு வழங்கப்பட்டு வரும் உற்பத்திக்கான ஊக்கத் தொகை டன் ஒன்றிற்கு 42 ரூபாய் 50 காசு வீதம் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதற்கென, மாநில அரசால் 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**26. கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை**

கடந்த 2016-17 முதல் 2019-20 அரவைப் பருவம் வரை கரும்பு விலையாக டன் ஒன்றுக்கு ரூ.2,750/- வழங்கப்பட்டது. கடந்த நான்கு பருவங்களில் கரும்புக்கு எந்தவித விலை உயர்வும் இல்லாமல் ஒரே விலையை தொடர்ந்து வழங்கியதால், கரும்பு சாகுபடிப் பரப்பு கணிசமாக குறைந்து கொண்டே வருகிறது. இதுகுறித்து, தொடர்ந்து கரும்பு விவசாயிகள் கரும்பு விலையை உயர்த்தி வழங்குமாறு, அரசுக்கு கோரிக்கை வைத்து வருகின்றனர்.

எனவே, கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, 2020-2021-ஆம் அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு, கூடுதல் “சிறப்பு ஊக்கத்தொகையாக” டன் ஒன்றுக்கு ரூ.150/- வீதம் நேரடியாக கரும்பு விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு வழங்க அரசு முடிவு

செய்துள்ளது. இதன் மூலம், கரும்பு விவசாயிகள் கரும்பு விலையாக டன் ஒன்றுக்கு 2,900 ரூபாய் வீதம் பெறுவார்கள். இதற்காக, சுமார் ஒரு இலட்சம் கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் மாநில அரசு 138 கோடியே 83 இலட்சம் ரூபாய் நிதியினை 2021-2022-ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்துள்ளது.

**27. கரும்பு உற்பத்திக்கான சிறப்புத் திட்டம்**

தமிழ்நாட்டில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக கோ 86032 என்ற கரும்பு இரகம் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கும் மேலான பரப்பளவில் பயிரிடப்பட்டு வருவதன் காரணமாக இந்த இரகத்தின் வீரியம் குறைந்து சர்க்கரை ஆலைகளால் போதுமான கட்டுமானத்தை (Sugar Recovery) அடைய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைக்கு தீர்வு காணும் பொருட்டு, கரும்பு விவசாயிகளின் நலன், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கில், உயர் மகசூல் வல்லுனர் விதைக் கரும்புகள் வழங்குதல், பரு சீவல் நாற்றுக்கள் மூலம் புதிய கரும்பு இரகங்கள் சாகுபடியினை ஊக்குவித்தல், திசு வளர்ப்பு நாற்றுக்களை வழங்குதல் ஆகிய செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் கரும்பு சாகுபடி பரப்பு அதிகரிப்பதோடு சர்க்கரை ஆலைகளின் சர்க்கரை கட்டுமானம் உயர்ந்து அவற்றின் நிதிநிலை மேம்படும். இத்திட்டம், 2 கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**<u>தோட்டக்கலைத்துறை</u>**

தமிழ்நாடு, மலர்களுக்கும், கனிகளுக்கும், காய்கறிகளுக்கும் புகழ்பெற்ற மாநிலம். எண்ணற்ற ரகங்கள் வாழையில் காணப்படுகின்றன**.** 'பழங்களின் அரசன்' என்று கூறப்படும் மாம்பழம் தமிழ்நாட்டில் உற்பத்தியாவதுடன் வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நம் மாநிலத்தின் பழம் பலா. வேர்ப்பலா, வேலிப்பலா, கூழுச்சக்கை, வருக்கச்சக்கை என்று வகைபல கொண்டது. நாவல்,

நெல்லி, விளாம்பழம், மாதுளை, திராட்சை என்று தமிழ்நாட்டில் விளைந்திடும் பழங்கள் தனி சுவை கொண்டவையாகவும், தரத்தில் சிறந்தவையாகவும் விளங்குகின்றன. நம் தமிழ்நாட்டில் பத்துக்கும் மேற்பட்ட கீரை ரகங்கள் உள்ளன. அரைக்கீரை, சிறுகீரை, சிவப்புக்கீரை, தண்டுக்கீரை, பண்ணைக்கீரை, பசலை, புளிச்சகீரை, முருங்கை, அகத்தி, கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி போன்ற இக்கீரைகள் மருத்துவ குணம் கொண்டவையாகவும் இருக்கின்றன. வெற்றிலை, பாக்கு, மிளகு, இஞ்சி, மஞ்சள் போன்ற தோட்டப் பயிர்களும் தமிழகத்திற்கு வளம் சேர்க்கின்றன.

"காய் மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் நெற்றிப்
பூ மாண்ட தீம் தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால் திசை போயது உண்டே"

என்ற சீவக சிந்தாமணி பாடல் மூலம் நன்றாகக் காய்த்த தென்னை நெற்று கீழே விழும்போது, பாக்குமரத்தின் உச்சியில் உள்ள தேன் போன்ற இனிய நீரையுடைய குலையைக் கீறி, பலாப்பழங்களை பிளந்து, தேமாங்கனிகளை சிதறச் செய்து, வாழைப்பழங்களையும் சிந்தச் செய்யும் வளம்பொருந்திய நாடு என்று பல்லடுக்குப் பயிர் சாகுபடி குறித்து விளக்குகிறது.

அனைத்து நிலங்களிலும் விளையக்கூடிய தோட்டக்கலைப் பயிர்களை, அதிகப் பரப்பில் சாகுபடி செய்து, உற்பத்தியைப் பெருக்கி, உழவர் நலன் பாதுகாத்திட இவ்வரசு, முனைப்புடன் செயல்படும்.

**28. பலன் தரும் பழப்பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிக்கும் திட்டம்**

தேசிய அளவில் தமிழ்நாடு, பழங்கள் உற்பத்தியில் ஏழாவது இடத்திலும், பரப்பளவில் பதினொன்றாவது இடத்திலும் உள்ளது. தற்பொழுது, 3 இலட்சத்து 13 ஆயிரம் எக்டராக உள்ள பழப்பயிர்

சாகுபடி பரப்பு இவ்வாண்டில், 3 இலட்சத்து 30 ஆயிரம் எக்டராக உயர்த்தப்படும். இதற்குத் தேவையான 80 இலட்சம் பல்வகை பழச்செடிகள், அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டம் 29 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் மாநில, ஒன்றிய அரசின் நிதியுடன் செயல்படுத்தப்படும்.

## 29. முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத்திட்டம்

அன்றாட தேவைக்கான நஞ்சில்லா காய்கறிகளை மகளிர், தங்களது இல்லங்களிலேயே உற்பத்தி செய்வதற்கும், குழந்தைகள் தாவரங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், ஊரகப் பகுதிகளில் 12 வகை காய்கறி விதைகள் அடங்கிய 2 இலட்சம் விதைத் தளைகள் மானியத்தில் வழங்கப்படும். மேலும், நகர்ப்புரங்களில் 6 வகை காய்கறி விதைகள் கொண்ட 1 இலட்சம் மாடித் தோட்டத் தளைகள் மானியத்தில் வழங்கப்படும்.

மக்களுக்கு தொடர்ந்து காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்ய இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. இதற்காக, காய்கறிகள் பயிரிடும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக எக்டருக்கு ரூ.15,000/- அல்லது இடுபொருட்கள் வழங்கி காய்கறி சாகுபடி பரப்பு உயர்த்தப்படும். இதற்கு தேவையான காய்கறி நாற்றுகளும், காய்கறி விதைகளும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

மேலும், காய்கறிகள் குறைவாக சாகுபடி செய்யக்கூடிய 2,000 கிராமங்களில் மண்வளத்தை மேம்படுத்தி 1,250 எக்டர் பரப்பில் காய்கறி பயிரிடவும், 638 எக்டர் பரப்பில் பந்தல் அமைத்து கொடிவகைக் காய்கறிகளைப் பயிரிடவும், அனைத்து மாவட்டங்களிலும் 1000 எக்டர் பரப்பில் கீரை சாகுபடி மேற்கொண்டு உற்பத்தியை அதிகரிக்கவும் மானியம் வழங்கப்படும். இத்திட்டம் 95

கோடி ரூபாய் செலவில் மாநில, ஒன்றிய அரசு நிதியுடன் செயல்படுத்தப்படும்.

**30. நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த இரண்டு இலட்சம் ஊட்டச்சத்துத் தளைகள் வழங்கும் திட்டம்**

பொது மக்களின் ஆரோக்கியத்தின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு, மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், ஊட்டச்சத்தை மேம்படுத்தவும், பார்வைக்கு பப்பாளி, நோய் எதிர்ப்பு சக்திக்கு எலுமிச்சை, இரும்புச்சத்துக்கு முருங்கையும் கறிவேப்பிலையும், கற்பூரவல்லி, திப்பிலி, கற்றாழை, புதினா போன்ற மருத்துவ குணம் கொண்ட மூலிகைச் செடிகள் அடங்கிய தளைகள் இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்படும். இதற்குத் தேவையான 16 இலட்சம் மூலிகைச் செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும்.

வைட்டமின் - சி பெட்டகம் என்றழைக்கப்படும் நெல்லி 200 எக்டரில் சாகுபடி செய்யப்படும். உற்பத்தி செய்யப்படும் மூலிகைச் செடிகள், நெல்லிக்காய்கள் டாம்ப்கால் எனப்படும் தமிழ்நாடு மருத்துவ தாவர பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்து நிறுவனத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் அடிப்படையில் வழங்கப்படும். இத்திட்டம் 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் மாநில, ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**31. தோட்டக்கலை முதன்மை மாவட்டங்கள்**

தோட்டக்கலைப் பயிர்கள் அதிகமாக விளைவிக்கக்கூடிய மாவட்டங்களில், தோட்டக்கலைக் கிடங்குகள் அமைக்கப்படும். திருவள்ளூர் மாவட்டத்தில் கீரை, மிளகாய், கடலூர் மாவட்டத்தில் முந்திரி, பலா, நாமக்கல் மாவட்டத்தில் மிளகு, வெங்காயம், தென்காசி மாவட்டத்தில் எலுமிச்சை, நெல்லி போன்ற தோட்டக்கலைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளித்து, விதை முதல்

சந்தைப்படுத்துதல் வரை அனைத்து சேவைகளும் வழங்கப்படும். இத்திட்டம் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும்.

**32. கடலூர் மாவட்டத்தில் பலாவிற்கான சிறப்பு மையம்**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டாரத்தில் பலாப்பயிருக்கான சிறப்பு மையம் அமைக்கப்பட்டு, பல்வேறு ரகங்கள் உள்ளடக்கிய மரபணு தொகுப்பு அமைக்கப்படும். உற்பத்தி, பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி வரை அனைத்து செயல்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு செயல்விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டம் 5 கோடி ரூபாய் செலவில் ஒன்றிய மாநில அரசின் நிதியோடு செயல்படுத்தப்படும்.

**33. சிக்கன நீர்ப் பாசனத் திட்டம்**

‘நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும்படைத் திசினோரே’

என்ற புறநானூற்று பாடல் வரிகளில் ‘நிலம் திருத்தி, நீரின் துணையால் வேளாண்மை செய்வோர் உயிரும், உடலும், படைத்துக்காப்போர்’ என்ற கருத்திற்கேற்ப விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட இவ்வரசு, பாசன வசதி உள்ள சிறு குறு விவசாயிகளைக் கண்டறிந்து, தொகுப்பு அணுகுமுறைக்கு, முக்கியத்துவம் கொடுத்து, சொட்டு நீர் பாசன முறையைப் பிரபலப்படுத்தி, குறைந்த நீர் ஆதாரத்தைக் கொண்டு, அதிக பரப்பில் சாகுபடி செய்து உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும். இதற்கென, இத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் எக்டர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 982 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் மாநில, ஒன்றிய அரசு நிதியுடன் செயல்படுத்தப்படும்.

## 34. வடலூரில் புதியதாக அரசு தோட்டக்கலை பூங்கா

தோட்டக்கலைத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் 24 பூங்காக்கள் பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு மையங்களாகவும், மாணவர்களுக்குப் பயிலும் களங்களாகவும் பல்வேறு வகையான அழகிய, அரிய வகைத் தாவரங்கள், மரங்களைக் கொண்ட தொகுப்பு மையங்களாகத் திகழ்கின்றன. பொதுமக்கள் உடற்பயிற்சி, நடைப்பயிற்சி மேற்கொள்வதற்கும், தூய காற்றினை சுவாசித்து, பசுமையான சூழலைக் கண்டு மனம் மகிழ்வதற்கும், சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடுவதற்கும் சிறந்த களமாக பூங்காக்கள் விளங்குகின்றன. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து நடப்பாண்டில் கடலூர் மாவட்டம் வடலூர் பேரூராட்சியில் புதிதாக தோட்டக்கலைப் பூங்கா துவங்கப்படும். இத்திட்டம் ஒரு கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும்.

<u>வேளாண்மைப் பொறியியல் துறை</u>

## 35. வேளாண் இயந்திரமயமாக்குதல்

வேளாண்மையில், கருவிகள் முக்கியப் பங்காற்றுகின்றன. உழவுக்கருவிகள், சமன்செய்யும் கருவிகள், விதைப்புக் கருவிகள், இறைப்புக் கருவிகள், பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள், அறுவடைக்கருவிகள், பதன்செய் கருவிகள் ஆகியவை முக்கியமானவை.

வேளாண்மையில், சங்க காலம் தொட்டு நிலத்தை பண்படுத்துவதற்கும், உழுவதற்கும் விவசாயக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன என்பதற்கு சான்றாக

'உருள் பொறி போல எம்முனை வருதல்' என்று சங்க கால இலக்கிய நூலான நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டிகளை

உடைத்து சமன் செய்யவும், தழைகளை உரமாக சேற்றில் புதைக்கவும் "உருள் பொறி" என்ற கருவி பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, வேளாண்மையில் இயந்திரங்கள், கருவிகளின் பயன்பாட்டின் அவசியத்தை உணர்ந்து, வேளாண் பணிகளை குறித்த நேரத்தில் மேற்கொள்ளவும், வேளாண் தொழிலாளர்கள் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யவும், பயிர் சாகுபடி செலவினைக் குறைக்கவும், நவீன தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி வேளாண்மையை மேம்படுத்திடவும், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த 2021-22 ஆம் நிதியாண்டில் தனிப்பட்ட விவசாயிகளுக்கு 7,106 வேளாண் இயந்திரங்கள், கருவிகளை மானியத்தில் வழங்கிடவும், விவசாயிகள் தங்கள் வருவாயை அதிகரிக்கவும், இளைஞர்களை விவசாயத் தொழிலில் ஈர்த்திடவும், விவசாயிகள், கிராமப்புர இளைஞர்கள், தொழில் முனைவோர், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் 193 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்கவும் ஒன்றிய, மாநில அரசு நிதியாக 140 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**36. புதிய வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல் செய்தல்**

விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைக் குறைந்த வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை, நடப்பாண்டில் மேலும் வலுப்படுத்துவதற்காக, 185 டிராக்டர்கள், 185 ரோட்டவேட்டர்கள், 185 கொத்துக் கலப்பைகள், 120 கேஜ்-வீல்கள், நவீன முறையில் பூச்சி மருந்துகள் தெளிக்க 4 ட்ரோன்கள் ஆகியவை, 23 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

**37. வட்டார அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் இருப்பினை வலுப்படுத்துதல்**

தற்சமயம் வேளாண்மைப் பொறியியல் துறையில் இயந்திரங்கள் வருவாய் கோட்ட அளவில் உள்ளன. வட்டார அளவில் விவசாயிகள் பயன்பெறும் வகையில், நடப்பு ஆண்டில் முதல்கட்டமாக டெல்டா மாவட்டங்களில் வட்டார அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள், கருவிகள் விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கப்படும்.

மேற்படி சேவையினை விவசாயிகள் வட்டார அளவில் பெற்றிட செயலி, இணையதளம் ஆகியவை மூலம் முன்பதிவு செய்திடவும், மிக எளிதாக வேளாண் இயந்திரங்களை பெற்றுப் பயன்பெறவும், வாடகைத் தொகையினை செலுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**38. நீர் சேகரிப்பு கட்டமைப்புகளைப் பராமரித்தல்**

நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளுக்கு வரும் நீரோட்டத்தை அதிகரிக்க, தூர் வாரி ஆழப்படுத்தி, அவற்றின் கொள்ளவை அதிகரிக்கும் நோக்கத்தில் நடப்பு நிதியாண்டில் 1700 நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளில் 5 கோடி ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**39. முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம்**

கிணற்றுப்பாசனத்திற்கு மின்சாரத் தேவை அதிகரித்து வருகிறது. மின்தொடர்பற்ற காடு, மலைப்பிரதேசங்களில், விவசாயிகளின் கிணற்றுப் பாசனத்திற்கு சூரிய சக்தி பம்ப்செட்டுகள் ஒரு வரப்பிரசாதமாகும். சூரிய சக்தி அதிக அளவில் கிடைக்கும் நம் மாநிலத்தில், அதனை மின் சக்தியாக மாற்றி வேளாண்மையில் பெருமளவில் பயன்படுத்திட முதலமைச்சரின் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்கும் திட்டம்

நடைமுறைப்படுத்தப்படும். மின்கட்டமைப்புடன் சாராத, தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், நடப்பு 2021-22 ஆம் நிதியாண்டில் 10 குதிரைத்திறன் வரையிலான 5000 பம்புசெட்டுகள் 70 சதவீத மானியத்தில் நிறுவப்படும். இத்திட்டம் 114 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**40. மழை நீரை விளைநிலங்களிலேயே சேமிக்க பண்ணைக் குட்டைகள்**

‘இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்

பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப

மழைபிணித்(து) ஆண்ட மன்னவன்’

என்று இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தில், ஏரிகள், தொட்டிகளை அமைத்து மழைநீரைச் சேமித்து, தனது நாட்டை வளமாக்கி, அவற்றை நல்ல பயன்பாட்டிற்குக் கொண்டு வரும் மன்னரைப் பற்றி பேசுகிறார். மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தினை இந்த அரசு உணர்ந்து, மானாவாரி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கி, விவசாயிகளின் நிலங்களில், தேவைக்கேற்ற அளவில் அதிகபட்சமாக 1 இலட்சம் ரூபாய் வரையில் 100 சதவீத மானியத்துடன் 500 பண்ணைக்குட்டைகள் அமைக்கப்படும். நடப்பாண்டில் 5 கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் இப்புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

**41. மானியத்தில் மின்மோட்டார் பம்பு செட்டுகள்**

‘இறைக்கிற கிணறு சுரக்கும்’ எனும் பழமொழிக்கேற்ப கிணறுகளிலிருந்து பாசனத்திற்கு நீரினை இறைப்பதற்காக விவசாயிகள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்குத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, மூன்று

ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு, பாசன நீரை இறைத்திட புதிய மின்மோட்டார் பம்பு செட்டுகள் வாங்கவும் திறன் குறைந்த பழைய மின் மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றி புதிய மின் மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தவும், 1,000 விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் புதிய மின்மோட்டார் பம்பு செட்டுகள் வாங்குவதற்கு, ஒரு மின்மோட்டார் பம்பு செட்டுக்கு ரூ.10,000 /- மானியம் வீதம் மொத்தம் 1 கோடி ரூபாய் செலவில் மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**<u>வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை</u>**

வேளாண் பெருமக்களின் வாழ்க்கை, உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்வதில் அடங்கியிருக்கிறது. சரியான சந்தை கிடைக்காவிட்டால் விலையைவிட அறுவடைக்கூலி அதிகமாக இருப்பதால் காய்கறிகளைப் பறிக்காமலேயே விட்டுவிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. தன் குருதியையும், வியர்வையையும் மணிகளாகப் பார்க்கும் உழவருக்கு சரியான விலை கிடைக்காமல் கண்ணீரே பரிசளிக்கப்படுவதைத் தடுக்கும்பொருட்டு, தமிழ்நாடு அரசு விற்பனைக் குழுக்களை அமைத்தும், தானியங்களைக் கொள்முதல் செய்தும் அவர்கள் உழைப்பிற்கு உரிய மரியாதையை அளித்து வருகிறது. இருந்தாலும் அரசு எடுக்கும் நடவடிக்கைகளைத் தாண்டி அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால்தான் விரைவில் அழுகக்கூடிய பயிர்களையும் காய்கறிகளையும் அவர்கள் பயிரிடுவார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு வருங்காலங்களில் அதுகுறித்து முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1999-ஆம் ஆண்டு தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிந்தையில் உதித்தது உழவர் சந்தை. இம்முயற்சி வெற்றிபெற இயலாது என்று

கணித்தவர்களையெல்லாம் தாண்டி மாபெரும் வெற்றியை பெற்றது. அதன் காரணமாக சிறு குறு விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த காய்கறிகளை நேரடியாக நுகர்வோரிடம் விற்பனை செய்யும் சுதந்திரச் சூழல் உருவாக்கப்பட்டது. அவர்கள் சுரண்டப்படும் நிலை ஒழிக்கப்பட்டது. மண் சார்ந்த காய்கறிகளும், பழங்களும், கீரை வகைகளும் விற்பனையாகும் நிலை உருவானது.

உழவர் சந்தைகள் வியாபாரிகளின் கூடாரமாக ஆகிவிடாமல் இருக்க அவற்றைப் புதுப்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உழவர் சந்தைகளின் நோக்கத்தை நீர்த்துப்போகச் செய்த நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, இந்த அரசு அவற்றை உயிர்ப்பிக்கும் முயற்சியை முழுவீச்சில் மேற்கொள்ளும்.

**42. உழவர் சந்தைகளை நவீன வசதிகளுடன் புனரமைத்தல்**

‘உழவர் சந்தை - உங்கள் சந்தை’.

‘ஆயிரம் திட்டங்கள் ஆட்சியில் அறிவித்தாலும்

அகிலத்தையே அசர வைத்து ஏழை உழவனின் வாழ்வில்

இன்பம் என்னும் சுடரை நிரந்தரமாய் ஏற்றி வைக்க

உழவர் சந்தை திட்டத்தை தந்த கலைஞரின் புதல்வரே ’

‘கட்டுப்படியான விலை என்பது கானல் நீரல்ல;

நியாயமான விலை என்பது நுகர்வோருக்கு நிழல் அல்ல; நிஜமே என்பதை தமிழ்நாட்டு மக்களுக்கு தெளிவாக விளக்க வைத்தது உழவர் சந்தை திட்டமே. தற்போது செயல்பட்டு வரும் உழவர் சந்தைகளில் நாளொன்றுக்கு சராசரியாக 2000 மெட்ரிக் டன் பழங்கள், காய்கறிகள், 8000 விவசாயிகள் மூலம் 4 இலட்சம் நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்யப்படுகின்றன.

எனவே, 50 உழவர் சந்தைகளின் தற்போதைய நிலையை ஆராய்ந்து அவை புதுப்பொலிவுடன் செயல்பட ஒவ்வொரு சந்தைக்கும் தேவையான அடிப்படை வசதிகளான, குடிநீர் வசதி, கழிப்பறை, கடைகள் புனரமைத்தல், தரைதளத்தை சீர்செய்தல், கூரைகள் சீர்படுத்துதல், நடைபாதை வசதிகள் அமைத்தல் போன்ற வசதிகள் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மாநில அரசின் நிதியிலிருந்து ஏற்படுத்தப்படும். இதன் மூலம் உழவர் சந்தைக்கு வருகை தரும் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் சுகாதாரமான சூழ்நிலை உருவாக்கப்படும்.

## 43. உழவர் சந்தைகளின் கழிவுகளை உரமாக்குதல்

தமிழ்நாட்டில் உள்ள உழவர் சந்தைகளில் நாளொன்றுக்கு சராசரியாக, 2,000 டன் காய்கனிகள் கையாளப்படுகின்றன. இதில் சராசரியாக நாளொன்றுக்கு 20 டன்னுக்கும் அதிகமாக காய்கறி வரத்து உள்ள உழவர் சந்தைகளில் தேக்கமுறும் ஒன்று முதல் இரண்டு டன் வரையிலான கழிவுகளை உரமாக்கிட திடக்கழிவு மேலாண்மை வசதிகள் 25 உழவர் சந்தைகளில் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் விற்பனைக்குழு நிதியிலிருந்து அமைக்கப்படும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் 'காய்கறி கழிவு உரம்' விவசாயிகளுக்கு உழவர் சந்தைகளில் விற்பனை செய்யப்படும்.

## 44. புதிய உழவர் சந்தைகள் அமைத்தல்

காய்கறிகள், பழங்கள், இதர விளைபொருட்களின் உற்பத்தி பெருகி வரும் நிலையில் அனைத்து நுகர்வோர்களுக்கும் உற்பத்தி பொருட்கள் பண்ணை பசுமையாகவும், தரமானதாகவும், விரைவில் சென்றடைவதையும் உறுதி செய்யவும், இடைத்தரகர்களின் இடர்பாடு இன்றி விவசாயிகள் நேரடியாக சந்தைப்படுத்தி கூடுதல் இலாபம் பெறவும், கடலூர், திண்டுக்கல் , ஈரோடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர்,

திருநெல்வேலி, திருச்சி, வேலூர், கரூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் பேரூராட்சிகளிலும் நகர்ப்புரங்களிலும் சிறிய அளவிலான 10 உழவர் சந்தைகள் நடப்பாண்டில் 6 கோடி ரூபாய் செலவில் மாநில அரசின் நிதியிலிருந்து அமைக்கப்படும்.

**45. ஊருக்கு விலை சொல்வோம்:**

உழவர் சந்தைகளில், அன்றைய தினத்தில் அருகில் உள்ள மொத்த காய்கறி சந்தையின் விலை விவரம், உள்ளூர் சில்லறை விற்பனைக் கடைகளில் விலை விவரம், உழவர் சந்தையில் நிர்ணயிக்கப்படும் விலை விவரங்கள் நுகர்வோர் அறிந்திடும் வண்ணம் உழவர் சந்தையின் நுழைவாயிலில் டிஜிட்டல் பலகையில் தெரிவிக்கப்படும். மேலும், உழவர் சந்தையில் உள்ள ஒவ்வொரு கடையிலும் அந்தக் கடையில் விற்பனை செய்யப்படும் காய்கனி விலை விவரங்களும் டிஜிட்டல் பலகையில் தெரிவிக்கப்படும்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வேளாண் விளைபொருட்களுக்கு முந்தைய தினத்தின் விலை விவரமும் பல்வேறு வேளாண் விளைபொருட்களுக்கான தேசிய அளவிலான வேளாண் சந்தைகளில் நிலவும் விலை விவரமும் விவசாயிகளும், வணிகர்களும் அறியும் வண்ணம் டிஜிட்டல் பலகையில் தெரிவிக்கப்படும்.

முதற்கட்டமாக வரத்து அதிகமுள்ள 50 உழவர் சந்தைகளிலும் 50 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும் இப்பலகைகள் 2 கோடியே 30 இலட்சம் செலவில் விற்பனை வாரிய நிதியில் அமைக்கப்படும்.

**46. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வேளாண் விளைபொருட்களுக்கான ஒரே சீரான அறிவிக்கை**

தமிழ்நாட்டில் தற்போது அமைந்துள்ள 26 விற்பனைக்குழுக்களின் கீழ் செயல்பட்டுவரும் 282 ஒழுங்குமுறை

விற்பனைக்கூடங்கள், தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) 1987-ஆம் ஆண்டு சட்டத்தின்படி செயல்பட்டு வருகின்றன. இச்சட்டத்தில் 120 வேளாண் விளைபொருட்கள் அட்டவணையில் உள்ளன. அவற்றில் 40 வேளாண் விளைபொருட்கள் மட்டுமே தமிழகத்தில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. அந்த 40 வேளாண் விளைபொருட்களுக்கு ஒரே சீரான அறிவிக்கை இல்லாமல் பரவலாக விற்பனைக்குழு வாரியாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதால், விவசாயிகளும் வணிகர்களும் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

2007-08 ஆம் ஆண்டு அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் மாநிலம் முழுவதும் விற்பனைக்குழுக்களில் ஒரே சீரான அறிவிக்கை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண்.361, வேளாண்மை (வேவி.2) துறை, நாள்.12.12.2008-இன்படி முதல் நிலை அறிவிக்கை செய்து உத்தரவிடப்பட்டு, இறுதி அறிவிக்கை வெளியிடாமல் உள்ளதால், இந்த 40 வேளாண் விளைபொருட்களுக்கு ஒரே சீராக உறுதி அறிவிக்கையினை வெளியிட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

### 47. வரத்து மிகுதியுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு அருகில் சேமிப்பு வசதியுடன் கூடிய விற்பனை நிலையம் அமைத்தல்

ஈரோடு, திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம், தஞ்சாவூர், கடலூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள அதிக வரத்து வரக்கூடிய 10 ஒழுங்குமுறை விற்பனைகூடங்களுக்கு அருகில் உள்ள கிராமப் பகுதிகளிலும் பேரூராட்சிப் பகுதிகளிலும் வேளாண் விளைபொருளை சேமிக்கவும், பரிவர்த்தனை செய்யவும் வசதிகள் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை குறைந்த போக்குவரத்து செலவினத்துடன் விற்பனை செய்ய இயலும். இத்திட்டம் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விற்பனை வாரிய நிதியில் செயல்படுத்தப்படும்.

**48. நவீன குளிர்பதனக் கிடங்குகள் அமைத்தல்**

எளிதில் அழுகக்கூடிய காய்கறிகளையும் பழங்களையும் உற்பத்தி செய்யும் விவசாயிகள் சந்தையில் வரத்து அதிகரிக்கும் போது ஏற்படும் விலைவீழ்ச்சியால் பாதிக்கப்பட நேர்கிறது. இதனைத் தவிர்க்க, குளிர்பதனக் கிடங்குகள் அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கருத்துக் கேட்பு கூட்டங்களில் கோரிக்கைகள் எழுந்துள்ளதைத் தொடர்ந்து முதற்கட்டமாக ஒட்டன்சத்திரம், பண்ருட்டி ஆகிய இரண்டு இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் 10 கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதியிலிருந்து அமைக்கப்படும்.

**49. இல்லம் தேடி பண்ணைக் காய்கறிகள் – மாநகராட்சிகளில் நடமாடும் காய், கனி அங்காடிகள்**

கோவிட் - 19 பெருந்தொற்று காரணமாக மே - 2021 - ல் ஊரடங்கு காலத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நடமாடும் காய்கறி கடைகள் மூலம், நுகர்வோருக்கு பசுமையான பண்ணை காய்கனிகள் இருப்பிடத்திற்கே சென்று விற்பனை செய்யப்பட்டன.

இத்திட்டம் நுகர்வோரிடமும், விவசாயிகளிடமும் நல்ல வரவேற்பை பெற்றதால் இதனை தொடர்ந்து செயல்படுத்த

சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், திருப்பூர் ஆகிய 5 மாநகராட்சிகளில் பரீட்சார்த்த முறையில் முதற்கட்டமாக 30 நடமாடும் காய்கனி அங்காடிகள் வாங்க கிராமப்புற விவசாய இளைஞர்களுக்கு 40 சதவிகித மானியம், அல்லது ரூ.2 இலட்சம் இதில் எது குறைவோ அது வழங்கப்படும். இதற்கென 60 இலட்சம் ரூபாய் விற்பனை வாரிய

நிதியிலிருந்து ஒதுக்கப்படும். இந்நடமாடும் வாகனம் மூலம் விற்பனை செய்யப்படும் காய்கனிகளுக்கான விலை அருகிலுள்ள உழவர் சந்தையில் நிலவும் விலையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

**50. நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை பகுதியில் மிளகிற்கான பதப்படுத்தும் மையம் அமைத்தல்**

நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மிளகு தனித்துவம் வாய்ந்தது. இம்மிளகு முற்றிலும் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படுவதால் உலக மிளகு வர்த்தகத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. கொல்லி மலை வாழ் பழங்குடி விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் மிளகினை பதப்படுத்தி சேமித்து வைக்க போதிய கட்டுமான வசதிகள் இல்லை. எனவே, பரிவர்த்தனைக்கூடம், உலர்களத்துடன் கூடிய பதப்படுத்தும் மையம் கொல்லி மலை காரவள்ளி பகுதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் விற்பனை வாரிய நிதியிலிருந்து அமைக்கப்படும்.

**51. நீலகிரி மாவட்டம் எடப்பள்ளி கிராமத்தில் 'ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம்' அமைத்தல்**

நீலகிரி மாவட்ட விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பழங்களையும் காய்கறிகளையும் சந்தைப்படுத்தும் சந்தைகளில் வியாபாரிகள் நிர்ணயிக்கும் விலைக்கே விற்க வேண்டிய நிலையில் உள்ளனர். மேலும், நீலகிரி மலையிலிருந்து, சந்தை அமைந்திருக்கும் இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு நேர விரயம், அதிக போக்குவரத்து செலவினம் ஏற்படுவதுடன், குறைவான விலையே கிடைக்கிறது. இதனைத் தவிர்க்க, குன்னூர், கோத்தகிரி பகுதிகளின் எல்லையிலுள்ள எடப்பள்ளி கிராமத்தில் நீலகிரி மாவட்ட விவசாயிகளால் விளைவிக்கப்படும் காய்கறிகளையும் பழங்களையும் ஒருங்கிணைத்து சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக விநியோகத் தொடர் மேலாண்மைக்கான கட்டமைப்புகளையும் இதர சேவைகளையும்

உள்ளடக்கிய 'ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம்' 2 கோடி ரூபாய் செலவில் ஒன்றிய மாநில நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

## 52. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உலர்களம் அமைத்தல்

விவசாயிகள் தங்களது விளைபொருட்களை சரியான ஈரப்பதத்தில் விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உலர்களம் கூடுதலாக அமைக்கத் திட்டமிடப்பட்டு கடலூர், விழுப்புரம், சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருப்பூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 28 உலர்களங்கள், மூன்றரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் விற்பனை வாரிய நிதியிலிருந்து ஏற்படுத்தப்படும்.

## 53. ஏற்றுமதி மூலம் ஏற்றம் காணும் திட்டம்

விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் ஏற்றுமதி வர்த்தகத்திற்கான வேளாண் ஏற்றுமதி சேவை மையம் நிறுவுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். சர்வதேச அளவில் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள், அவற்றின் தரம், ஏற்றுமதிக்கான வழிமுறைகள் போன்ற விபரங்களை விவசாயிகள் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். மேலும் சந்தையாளர்களை கண்டறிந்து அவர்களை விவசாயிகளுடன் இணைப்பது மிகவும் அவசியமாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளுக்கு ஏற்றுமதி குறித்த விவரங்கள், விற்பனை வாய்ப்புகள், தரச் சான்றுகள் பெறும் முறைகள் போன்றவற்றை ஒருங்கிணைத்து வழங்கிட வேளாண் ஏற்றுமதி சேவை மையம் அமைக்கப்படும். இதற்கென, சென்னை, கிண்டியில் ஏற்கனவே கட்டப்படும் கட்டடத்தில் ஒரு கோடி ரூபாய் செலவில் மாநில நிதி ஒதுக்கீட்டில் கட்டமைப்பு வசதிகள் விரிவுபடுத்தப்படும்.

மேலும், வேளாண் ஏற்றுமதியாளர்கள் தாங்கள் ஏற்றுமதி செய்யும் உணவு பொருள்களில் உள்ள வேதிப்பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட ஏற்பமைவு வரம்புக்குள் உள்ளதற்கான சான்று வழங்க வேண்டும். இதற்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள, தங்கியுள்ள நச்சு தன்மையை கண்டறியும் வசதிகளை கொண்ட மூன்று ஆய்வு கூடங்களுக்கு அபீடா (APEDA) தரச்சான்று பெறப்பட்டு, இலாப நோக்கற்ற முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்படும். இது தவிர, முதன்முறையாக ஏற்றுமதியாளராகப் பதிவு செய்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ள 50 சதவிகித மானியம் வழங்கப்படும். இதற்கென, முதற்கட்டமாக இந்த ஆண்டு 10 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**54. ஈரோடு மாவட்டம் தாளவாடியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டுமான வசதிகள்**

ஈரோடு மாவட்டம் தாளவாடி பகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு சேமிப்புக் கிடங்கு, பரிவர்த்தனைக்கூடம், கூட்டரங்குடன் கூடிய அலுவலகக் கட்டடம், மின்னணு எடை மேடை, ஆகிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இத்திட்டம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அரசு நிதியுடன் செயல்படுத்தப்படும்.

**55. ஏற்றம் தரும் முருங்கை ஏற்றுமதி – சிறப்பு ஏற்றுமதி மண்டலம் அமைத்தல்**

தமிழ்நாட்டில் விளையும் பொருட்களில் தற்போது முருங்கைக்கான ஏற்றுமதி வாய்ப்புகள் மிக அதிகமாக உள்ளன. முருங்கையின் மகத்துவத்தை உணர்ந்து, பல்வேறு நாடுகளும் முருங்கை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை பெருமளவு நாடுகின்றன. தமிழ்நாட்டு முருங்கை வகைகளுக்கு உள்ள ஏற்றுமதித் தேவையைக் கருத்தில் கொண்டு முருங்கை பெருமளவில் விளையும் தேனி,

திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, அரியலூர், திருப்பூர், மதுரை மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகள் 'முருங்கைக்கான ஏற்றுமதி மண்டலமாக' அறிவிக்கப்படும். முருங்கை ஏற்றுமதி மண்டலத்திலுள்ள மாவட்டங்களில் முருங்கை சாகுபடி பரப்பினை அதிகரித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முருங்கையை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க, முருங்கைக்கென சிறப்பு ஏற்றுமதி சேவை மையம் அமைக்கப்படும். இதில், முருங்கை ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான நாடுசார் தர நிர்ணயங்கள், தேவைகள், கட்டுப்பாடுகள் குறித்த விவரங்கள், ஒன்றிய அரசின் அபீடா (APEDA) நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படும் திட்டங்கள் குறித்த விபரங்கள் வழங்கப்படும். முருங்கை விவசாயிகள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதி செய்யும் நாடுகளிலுள்ள வணிகர்களின் விபரங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு ஏற்றுமதி சந்தை இணைப்புகள் வலுப்படுத்தப்படும். மேலும், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயாரித்திட தேவையான உலர்த்திகள் (Driers), இலைகளை பொடியாக்கும் இயந்திரங்கள் (Pulveriser), தானியங்கி சிப்பம் கட்டும் இயந்திரம் போன்ற கட்டமைப்பு வசதிகள் செய்யப்படும். இத்திட்டம், மதுரை மாவட்டத்தில், முதல்கட்டமாக, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

**56. சென்னை மாநகராட்சியில் கொளத்தூர் பகுதியில் விளைபொருட்களுக்கும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்களுக்குமான நவீன விற்பனை மையம்.**

விவசாயிகளின் பசுமையான காய்கனிகள் சென்னை பெருநகரமக்களுக்கு கிடைத்திட வழி செய்திட சென்னை மாநகராட்சியில் உள்ள கொளத்தூரில் 'நவீன வேளாண் விற்பனை மையம்' அமைக்கப்படும். இம்மையத்தில் விவசாயிகளின்

விளைபொருட்களை விற்பனை செய்யும் அங்காடிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் அங்காடிகள், இயற்கை வேளாண் அங்காடிகள், சூரிய மின்சக்தி மூலம் செயல்படும் குளிர்பதன வசதி ஆகியவை அமைக்கப்படும்.

இம்மையத்தில் நாள்தோறும் பெறப்படும் காய்கனி கழிவுகளை கொண்டு திடக்கழிவு மேலாண்மை மூலம் இயற்கை உரங்கள் தயாரிக்கப்படும். இம்மையம் மூலம் நுகர்வோருக்கு நியாய விலையில் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டு நுகர்வோரும் விவசாயிகளும் ஒருங்கே பயன்பெற வழிவகை செய்யப்படும். இம்மையம் ஒரு கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதியிலிருந்து ஏற்படுத்தப்படும்.

**57. விளைபொருளுக்கு உரிய விலை பெற மின்னணு ஏலம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கான சிறப்பு மென்பொருள்**

சந்தை ஏற்ற இறக்கங்கள் என்பவை விவசாயிகளை எப்போதும் கவலை கொள்ளச் செய்பவை. விற்பனை மேற்கொள்ள ஒரே சந்தையை நம்பி இருப்பதே இதற்குக் காரணமாகும். மின்னணு ஏல (e-auction) முறையினை விவசாயிகளிடம் கொண்டு சேர்ப்பதன் மூலமே இதற்குத் தீர்வு காண முடியும் என்பதால் தமிழகத்தில் உள்ள அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், சந்தைகள், உற்பத்தியாளர் நிறுவனங்களை இந்த மென்பொருளுக்குள் கொண்டு வந்து அதன் மூலம் நாடு முழுவதும் உள்ள வியாபாரிகளுடன் இணைப்பு ஏற்படுத்தப்படும். இதன்மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருளுக்கு அதிகபட்ச விலையினைக் கோரிப் பெற முடியும். இந்த மையம் மின்னணு ஏலத்திற்கான தளங்களுடன் இணைக்கப்பட்டு, விவசாயிகளுக்கும் சந்தைகளுக்குமான இணைப்பையும் ஏற்படுத்தும். இதற்காக, மாநில நிதியிலிருந்து 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

## 58. தமிழ்நாட்டிற்கே உரிய சிறப்புப் பயிர்களுக்கு புவிசார் குறியீடு பெறுதல்

ஈரோடு மஞ்சள், மதுரை மல்லி போன்ற தமிழகத்திற்கே உரிய சிறப்புப் பயிர் இரகங்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டு, உலகளாவிய சந்தையில் அவற்றின் மதிப்பு உயர்ந்துள்ளது. இதுபோன்று, கொல்லிமலை மிளகு, பண்ருட்டி பலா, பொன்னி அரிசி போன்ற பழந்தன்மை பொருந்திய சிறப்பு விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற அரசு நடவடிக்கை எடுக்கும். இதன் மூலம் இவ்விளைபொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள் அதிக இலாபம் பெறுவார்கள். இத்திட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவில் மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும்.

## 59. சந்தை சார்ந்த விவசாயம்

"சந்தை பார்த்து சாகுபடி செய்" என்ற சொல்லடைக்கு ஏற்றவாறு விவசாயிகளை சந்தையின் தேவையினை அறிந்து அதற்கு ஏற்ற பயிர் செய்திட தேவையான பயிற்சி அளிக்கப்படும். இதனால் சந்தைக்கு ஏற்ற இரகங்களையும் தொழில் நுட்பத்தையும் கையாள விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதனால் விவசாயிகளின் விளை பொருளுக்கு நியாயமான விலை கிடைப்பது உறுதி செய்யப்படும்.

## 60. வேளாண் விற்பனை - வேளாண் வணிகத்துறையினை வலுப்படுத்தி சீரமைத்தல்

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை வெளிநாட்டு சந்தையிலும் உள்நாட்டு சந்தையிலும் உரிய விலையில் விற்பனை செய்வதற்கு தேவையான ஏற்றுமதி, மதிப்புக்கூட்டல், திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகியவற்றை மேற்கொள்ள ஏதுவாக தகுதிவாய்ந்த நபர்கள் கொண்டு வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறை வலுப்படுத்தப்பட்டு சீரமைக்கப்படும்.

## 61. உணவுப் பதப்படுத்துதலுக்கென தனி அமைப்பு

விதைப்பு முதல் அறுவடை வரை அரும்பாடு பட்டு அதிகமாக செலவு செய்து, உற்பத்தி செய்த விளைபொருட்களை தற்போது விவசாயிகள் அறுவடை செய்தவுடனேயே வந்த விலைக்கு விற்று விடுகிறார்கள். உற்பத்தி அதிகமாகும் காலங்களில், உற்பத்தி செலவுக்குக்கூட கட்டுப்படியாகாத விலைக்கு விற்க வேண்டிய கட்டாயத்திற்கு விவசாயிகள் சில சமயம் தள்ளப்படுகிறார்கள்.

இதற்கு மாறாக, வேளாண் விளைபொருட்களை நல்ல முறையில் உலரவைத்து, தரம்பிரித்து, சுத்தமான முறையில் பதப்படுத்தி, மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக விற்பனை செய்தால், விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். எனவே, தமிழ்நாட்டில் விளையும் பல்வேறு விளைபொருட்களை முறையாகப் பதப்படுத்தி விற்பனை செய்வது குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த இவ்வரசு முயற்சிக்கும்.

அந்தவகையில், உணவுப் பதப்படுத்துதலுக்கு முக்கியத்துவம் அதிகக் கவனம் செலுத்தி, தமிழகத்தில் உணவுப்பதப்படுத்தும் தொழிலை முன்னேற்றுவதற்காக, நடப்பு நிதியாண்டிலேயே, உணவுப் பதப்படுத்துதலுக்கென தனி அமைப்பு ஒன்று துவங்கப்படும். உணவுப் பதப்படுத்துதல் குறித்த பயிற்சி, விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுடன் இணைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை இப்பிரிவு மேற்கொள்ளும். மேலும், உணவுப் பதப்படுத்துதல் தொழில் துவங்க முன்வரும் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில், இதற்கென, மீன் பதப்படுத்துதலுக்கு நாகப்பட்டினம், தேங்காய்க்கு கோயம்புத்தூர், வாழைக்கு திருச்சி, மஞ்சளுக்கு ஈரோடு, சிறு தானியங்களுக்கு விருதுநகர் என ஐந்து தொழில்கற்கும் மையங்கள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்</u>

**62. பல்கலைக்கழகத்தின் வேளாண் ஆராய்ச்சியையும் வேளாண் கல்வியினையும் மேம்படுத்த நிதி ஒதுக்கீடு**

விவசாயத்தில் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு இணைப்புக் கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் கற்பிக்கவும், ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய செயல்பாடுகளை மேற்கொள்வதற்கும் பல்கலைக் கழகத்திற்கென நடப்பு 2021-22 ஆம் நிதியாண்டில் 573 கோடியே 24 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**63. தமிழ் வழியில் வேளாண்மை, தோட்டக்கலைக் கல்வி அறிமுகம்**

தமிழ்வழி பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்காக, தமிழகத்தில் வேளாண்மை, தோட்டக்கலை இளநிலை பாடத்திட்டத்தினை **தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்** கோயம்புத்தூரில் உள்ள ஒரு கல்லூரியில் **ஒரு வகுப்பு** தமிழ் வழியில் பயிற்றுவிக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கென மாநில அரசு 25 இலட்சம் ரூபாய் நிதியினை முதல்கட்டமாக ஒதுக்கீடு செய்யும்.

**64. தமிழகத்தில் மேலும் ஒரு தோட்டக்கலைக் கல்லூரி**

தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிரின் முக்கியத்துவம் தற்போது பெருகி வரும் சூழ்நிலையில், தோட்டக்கலைப் பயிர்கள் பெருமளவில் சாகுபடி செய்யப்பட்டு, அதிக உற்பத்தியுடன், வணிகத்திலும் சிறந்து விளங்கும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜீனூரில் 150 ஏக்கரில் தோட்டக்கலை கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டு, தோட்டக்கலை பயில ஆர்வமுள்ள மாணவர்களின் விருப்பம் நிறைவேற்றப்படும். இதற்கென நடப்பாண்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செயல்படுத்தப்படும்.

**65. புதிய இரகங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்கு சிறப்புக் கவனம்**

பயறு வகைகளிலும் எண்ணெய்வித்துக்களிலும் அதிக மகசூல் தரக்கூடிய இரகங்களையும், குறைந்த வெப்ப மண்டல பழப்பயிர்கள் உற்பத்தி தொழில் நுட்பங்களையும் விவசாயிகளிடையே பிரபலப்படுத்தவும், பாரம்பரிய, உயர் விளைச்சல் இரகங்கள் பற்றிய ஆராய்ச்சி நடத்தவும் நடப்பாண்டில் 5 கோடியே 57 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கப்படும்.

**66. வேளாண்மையில் தொலையுணர்வு தொழில்நுட்பம் (Remote Sensing)**

தொலையுணர்வு தொழில்நுட்பத்தின் மூலம், பயிர் பரப்பளவு, மகசூல் மதிப்பீடு, மண், நில வள வரைபடம், வேளாண் பேரழிவுகளின் தாக்கத்தை மதிப்பிடுதல் குறித்த ஆராய்ச்சிகள் செயல்படுத்தப்படும். 17,514 பாசன ஏரிகளின் வரைபடம் கணினிமயமாக்கப்பட்டு அவற்றின் நீர்ப்பரப்பானது செயற்கைக்கோள் உதவியுடன் கண்காணிக்கப்படும். இவ்வாண்டில், தொலையுணர்வுத் தொழில் நுட்பம் மூலம் முக்கிய பயிர்கள் குறித்த தகவல்களை உருவாக்கி பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கு ஏதுவாக 72 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**67. ஈரோட்டில் மஞ்சள் ஆராய்ச்சி நிலையம்**

சுமார் 20,000 எக்டர் பரப்பில் மஞ்சள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 96 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்து, அகில இந்திய அளவில் தமிழ்நாடு ஐந்தாவது இடத்தில் உள்ளது. இத்தகைய பெருமைமிகு மஞ்சள் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் மஞ்சள் பயிருக்கான ஆராய்ச்சி மையம் சுமார் 100 ஏக்கர் பரப்பில்,

அமைக்கப்படும். இதற்கென, 2 கோடி ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**68. வேளாண் வணிகம், தொழில்முனைவோர் மேம்பாடு**

வேளாண்மை தொடர்பான பல்வேறு தொழில்களில், வணிகம், தொழில்முனைவோர் மேம்பாட்டிற்காக, ஒன்றிய அரசின் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மண்டல ஒருங்கிணைப்பு நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் இயங்கும் தேசிய வேளாண் உயர் கல்வி திட்டத்தின் மூலம் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறப்பட்டு, இளநிலை மாணவர்களின் தொழில் முனையும் திறன் மேம்படுத்தப்படும். சர்வதேச நிறுவனங்களில் கல்வியாளர்களுடனான தொடர்பும் தொழில் வல்லுநர்கள் உடனான இணைவும் மேம்படுத்தப்படும்.

இனிவரும் ஆண்டுகளில் வேளாண் மாணவர்கள் தொழில் முனைவோராக வளர்ச்சி அடைய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை வேளாண் பட்டப்படிப்பில் இது தொடர்பான பாடங்கள் விருப்பப் பாடமாக சேர்க்கப்படும்.

வேளாண் பல்கலைக்கழகத்தில் வேளாண் தொழில் முனைப்பு மையம் (Agri incubation Centre) வலுப்படுத்தப்படுவதுடன் தேவையான இடங்களில் புதிய தொழில் முனைப்பு மையங்களும் (Agri incubation Centre) உருவாக்கப்படும்.

**69. 'நம்மாழ்வார்' இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்**

பல்வேறு பயிர்களில் இயற்கை வேளாண்மை தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வளாகத்தில், ஏற்கெனவே கோயம்புத்தூரில் இயங்கி

வரும் வளங்குன்றா வேளாண்மைக்கான துறை மேம்படுத்தப்பட்டு, 'நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்' என பெயர் மாற்றம் செய்யப்படும். இதற்கென, முதற்கட்டமாக மூன்று கோடி ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**70. மானாவாரிப் பயிர்களுக்கான ஆராய்ச்சியினை வலுப்படுத்துதல்:**

சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தின் அடிப்படையான மானாவாரி பயிர்களுக்கான ஆராய்ச்சியினை மேம்படுத்த, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையிலுள்ள மண்டல ஆராய்ச்சி நிலையம், சிவகங்கை மாவட்டம், செட்டிநாட்டில் உள்ள மானாவாரி சாகுபடிக்கான மகத்துவ மையம் ஆகியவற்றின் செயல்பாடுகள் வலுப்படுத்தப்பட்டு மானாவாரி விவசாயிகளுக்கான தொழில்நுட்பங்கள் வழங்கப்படும். இதற்காக, 50 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுகீடு செய்யப்படும்.

**நீர் வளம்**

**71. பாசனக் கால்வாய் தூர்வாருதல்**

தமிழகத்தில் ஆண்டு முழுவதும் பாசனத்திற்காக பாயும் ஆறுகள் ஏதுமில்லை. மொத்த சாகுபடிப் பரப்பில் 57 சதவிகிதம் ஆறுகள், வாய்க்கால்கள், கிணறுகள், ஏரிகள், குளங்கள் மூலம் பாசனம் பெறுகிறது. கிடைக்கும் மழைநீரினை வீணாக்காமல், பல்வேறு மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மூலம் தேக்கி வைத்து, நீர்வளத்தினை மேம்படுத்துவதற்கும், ஆறு, குளம், ஏரிகளிலிருந்து கால்வாய்கள் மூலம் வயலுக்குச் செல்லும் வாய்க்கால்களை உரிய காலத்தில் தூர்வாரி, பாசனநீர் ஆயக்கட்டுப் பகுதியின் கடைமடைப் பகுதி வரைக்கும் செல்வதை உறுதிசெய்வதற்கும், இவ்வரசு பதவியேற்றவுடனேயே, "நீர்வள துறை" எனும் துறையினை தனியாகத்

தொடங்கி, நீர்வள ஆதாரத்தினை சேமிக்கும் பல்வேறு பணிகளை முடுக்கி விட்டுள்ளது.

காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை நெல் சாகுபடிக்காக, கடந்த ஜூன் 12 ஆம் தேதியன்று மேட்டூர் அணையினை திறப்பதற்கு முன்பே, டெல்டா மாவட்ட விவசாயிகளையும் விவசாய சங்கப் பிரதிநிதிகளையும் கலந்து பேசி, பாசன கால்வாய்கள் அனைத்தும் 65 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் 647 தூர்வாரும் பணிகள் காலத்தே மேற்கொள்ளப்பட்டதால், காவிரி நதிநீர் டெல்டா பகுதி கடைமடை வரை சென்றடைந்தது. இதன் காரணமாக குறுவை சாகுபடி சிறப்பாக துவங்கப்பட்டு நடப்பாண்டில் 4.6 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, கடந்த 35 ஆண்டு டெல்டா வரலாற்றில் இல்லாத சாதனையாகும்.

### 72. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டமானது வலுவான சட்ட வடிவமைப்பின் மூலம் கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு சட்டப்பூர்வ உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கும் மிகப்பெரிய சமூக பாதுகாப்பு திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், விவசாயம், விவசாயம் சார்ந்த பணிகளின் செலவினம் தமிழ்நாட்டில் சுமார் 80 விழுக்காடாகும்.

தமிழ் நாட்டில், இயற்கை வள மேலாண்மைப் பணிகள் இனத்தில் தடுப்பணை அமைத்தல், மண்வரப்பு ஏற்படுத்துதல், கிணறு வெட்டுதல், தனி நபர், சமுதாய உறிஞ்சுக்குழி அமைத்தல், தனிநபர் - சமுதாயக் கிணறுகள் போன்ற பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு நிலத்தடி நீர் மீள் நிரப்பப்பட்டு அதன் மூலம் மண்ணின் ஈரப்பதமும் நீர் வளமும் பாதுகாக்கப்படும்.

நீடித்த, நிலையான சொத்துக்களை உருவாக்குவதில் எப்போதும் முன்னோடியாக விளங்கும் தமிழ்நாட்டில் இயற்கை வள மேலாண்மைப் பணிகளுடன் உணவு தானிய சேமிப்பு கிடங்குகள் கட்டுதல், பால் சேகரிக்கும் கூடங்கள் கட்டுதல், நெற்களங்கள் அமைத்தல், சிறு பாலங்கள், படுக்கை மட்ட பாதைகள் ஏற்படுத்துதல் போன்ற குறுக்கு வடிகால் அமைப்புப் பணிகளும், ஊரக இணைப்பு சாலைகள் அமைத்தல் போன்ற பிற பணிகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

**73. ஊரகச் சாலைகள்**

ஊரகச் சாலை தொகுப்பானது, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய சாலைகளை உள்ளடக்கியது. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும், விவசாயத்திற்குத் தேவையான இயந்திரங்களை எடுத்துச்செல்வதற்கும், வேளாண் பெருமக்கள் விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் எடுத்துச் செல்வதிலும் இன்றியமையாதவையாக உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள பரந்த ஊரகச் சாலைகள் தொகுப்பினை பயன்படுத்தத்தக்க வகையில் பராமரிப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஊரகச் சாலைகள்,

தமிழ்நாட்டில் உள்ள ஊரகச் சாலைத் தொகுப்பு, வெகுவாக வளர்ச்சி அடைந்து, ஜூலை 2021-ஆம் ஆண்டின் படி, சுமார் 1 இலட்சத்து 53 ஆயிரம் கிலோ மீட்டர் நீளம் கொண்ட, கிராம ஊராட்சி சாலைகளையும் ஊராட்சி ஒன்றிய சாலைகளையும் கொண்டுள்ளது. விவசாய இடுபொருட்கள், விளைபொருட்களைக் கொண்டு செல்ல ஏதுவாக நடப்பாண்டிலும் ஊரகச் சாலைகள், பாலங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**74. தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்**

கிராமப்புர ஏழை மக்களின் வருமானத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு மகளிர்

மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பண்ணை, பண்ணை சாரா நடவடிக்கைகளில் உள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. விவசாய சுற்றுச்சூழல் சார்ந்த பயிர் சாகுபடி, இயற்கை விவசாயம், உற்பத்தியாளர் நிறுவனம் உருவாக்குதல், பண்ணை சார்ந்த தொழில்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுவரை சுமார் 4,355 உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு மாநிலத்தில், 76 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன. மாநிலத்தில் நான்கு இலட்சம் மகளிர் சுய உதவிக் குழு குடும்பங்களின் வீட்டின் பின்புறத்தில் ஊட்டச்சத்து தோட்டம் அமைக்கப்பட்டு வருகிறது.

### 75. சாகுபடிப் பணிகளுக்கு நிறுவனங்கள் மூலம் கடன் வசதி

வேளாண் பெருமக்கள் காலத்தே பயிர் சாகுபடியை மேற்கொள்வதற்கும், வேளாண் தொழிலில் பல்வேறு நிலையான உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கும் வேளாண் பிரிவில் முதலீட்டினை அதிகரிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். அந்த வகையில், விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதியை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், மண்டல கிராம வங்கிகள் மூலம் உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு கிடைத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு வழிகளில் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD) தனது 2021-2022 ஆம் ஆண்டிற்கான திறன் சார்ந்த கடன் திட்டத்தில் (Potential Linked Credit Plan) வேளாண் கடனாக ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 509 கோடியும், வேளாண்

உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 9 ஆயிரத்து 607 கோடியும் வழங்கும் வகையில் விரிவான திட்டம் தயாரித்துள்ளது. அதன்படி, மாவட்ட வாரியான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மேற்காணும் வங்கிகள் மூலமாக தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள விவசாயிகளுக்கும் தேவையான கடன் உரிய காலத்தில் கிடைப்பதை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் தொடர்ந்து கண்காணிக்கும்.

**76. கடன் கூட்டுறவு சங்கங்கள்**

தானிய ஈட்டுக்கடன் வழங்க ஏதுவாக இத்துறையின் கீழ் இயங்கும் வேளாண் விளைபொருள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் சேமிப்புக் கிடங்கு வசதிகளை ஏற்படுத்தவும், ஏலக்கூடங்களை வலுப்படுத்தவும் ரூ.4.69 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**77. பட்டு வளர்ச்சி**

ஆடைகளின் அரசியான பட்டின் வளர்ச்சிக்கென நடப்பாண்டில் 250 எக்டரில் மரவகை மல்பெரி சாகுபடி மேற்கொள்ள விவசாயிகளுக்கு மானியம் வழங்க 75 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மல்பெரியில் சொட்டு நீர்ப்பாசனம் ஊக்குவிக்கப்படும்.

**78. கால்நடை பராமரிப்பு**

விவசாயம் மற்றும் உணவு உற்பத்தியில் கால்நடைகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒட்டுமொத்த மனித குல வாழ்வாதாரமும் கால்நடைகளையே சார்ந்துள்ளது. மாநில விவசாய உற்பத்தி மதிப்புக்கு நம் மாநிலத்தில் உள்ள கால்நடைகள் சுமார் 41.58 விழுக்காடு பங்களிப்பு செய்கின்றன.

பசுந்தீவனத்தின் முக்கியத்துவத்தினை உணர்ந்து அதன் உற்பத்தியை ஊக்குவிக்கவும் பசுந்தீவனம் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேமித்து வைத்து, வறண்ட காலங்களில்

கால்நடைகளுக்கு வழங்குவதை ஊக்குவிக்கும் வகையில், விவசாயிகளுக்கு ஊறுகாய்ப் புல் (Silage pit) தயாரிக்கும் அலகுகள் அமைக்க ஒரு கோடியே 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

பசுந்தீவன வங்கிகளை ஏற்படுத்துதல், கால்நடை நலம், நாட்டுக்கோழி இனப்பெருக்கப் பண்ணை நிறுவுதல் ஆகியவற்றுக்கென **27 கோடியே 12 இலட்சம்** ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தில், 18 மாவட்டங்களில் 16 உப வடிநிலப் பகுதிகளில் 11 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கால்நடை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**79. பால்வளம்**

கறவை மாடு வளர்க்கும் **விவசாயிகள், உற்பத்தி செய்யும் பாலை நியாயமான விலைக்கு கொள்முதல் செய்வதற்கென பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.** ஆவின் நிறுவனம் தினசரி 41 **இலட்சம் லிட்டர் கொள்முதல்** செய்து, இந்திய அளவில் பால் **கொள்முதலில் ஆவின்** 3 வது இடத்தில் உள்ளது. இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் வகையில், கொள்முதல், பதப்படுத்தும் கட்டமைப்புகளைத் வலுப்படுத்துவதும், கிராம அளவில் கறவை மாடு வளர்ப்போரின் இல்லத்திற்கே சென்று கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சை அளிப்பதும் அவசியம். இதற்கான பணிகளை மேற்கொள்ள 14 கோடியே 28 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**80. மீன்வளம் - மீனவர் நலம் (உள்நாட்டு மீன்வளர்ப்பு)**

விவசாயிகள் மீன் வளர்ப்பு மூலமாக அதிக வருமானம் பெறும் வகையில் அரசு மீன் பண்ணைகளில், நுண் மீன் குஞ்சுகளும் மீன் விரலிகளும் வளர்த்து விற்பனை செய்யப்படும். விவசாயிகள் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்க முன்வரும் விவசாயிகளுக்கு

மானியம் வழங்க ஒரு கோடியே முப்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, அரசு மீன் பண்ணைகள், மீன் விற்பனை அங்காடிகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஏழு கோடியே ஏழு இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் பாசனக்குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல், பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பு, மண் குளங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு, கூண்டு மீன் வளர்ப்பு மீன்விற்பனை நிலையங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**81. திருச்சி - நாகப்பட்டினம் பகுதியினை வேளாண் தொழில் பெருந்தடமாக அறிவித்தல்**

தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருச்சி போன்ற மாவட்டங்களை உள்ளடக்கிய காவேரி டெல்டா பகுதியில், அரிசி, பயறுவகைகள், வாழை, தென்னை போன்ற விளைபொருட்கள் ஆண்டு முழுவதும் உற்பத்தியாகின்றன. இப்பகுதிகளில் உற்பத்தியாகும் விளைபொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டு அரிசி ஆலைகள் பயறு உடைக்கும் நிலையங்கள், எண்ணெய்ப் பிழியும் ஆலைகள், கயிறு ஆலைகள் போன்ற பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலைகள் காவேரி டெல்டா பகுதிகளில் நிறைய எண்ணிக்கையில் உருவானால், இப்பகுதியில் உள்ள வேளாண் பெருமக்கள் வாழ்வும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வும் வளமாகும். எனவே, இப்பகுதிகளில் வேளாண்மை தொடர்பான தொழிற்சாலைகள் உருவாகி, வளர்ச்சியடைவதற்காக, திருச்சி - நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு இடையேயான பகுதியை வேளாண் தொழிற்சாலைகளுக்கான பெருந்தடமாக அறிவிக்கை செய்ய இந்த அரசு முடிவு செய்துள்ளது. இம்மாவட்டங்களில் வேளாண் தொழில்கள் மேம்பட இடையூறாகவுள்ள

உட்கட்டமைப்பு இடைவெளியை சரிசெய்யவும், புதியதாக தொழில் உட்கட்டமைப்புகளை உருவாக்கவும், மேலும் புதிய தனியார் முதலீடுகளை இப்பகுதிகளில் ஈர்க்கவும் இத்தடம் உதவும். இந்த அறிவிக்கைக்கு செயல்வடிவம் கொடுக்கும் வண்ணம், இப்பகுதிகளில் பல்வேறு வேளாண் சார்ந்த தொழில் நிறுவனங்கள் உருவாகுவதற்கு ஏதுவாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் உதவியுடன் இப்பகுதிகளில் இயங்கிவரும் தொழிற்பேட்டைகளை மேம்படுத்தியும், புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கியும், போக்குவரத்து வசதிகளை வலுப்படுத்தி சந்தைகள் மற்றும் துறைமுகங்களை இணைத்தும், அடிப்படை மின்சார வசதிகளை பெருக்கியும் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

2021 - 2022 ஆம் ஆண்டில் வேளாண்மை, வேளாண்மை தொடர்புடைய துறைகளான கால்நடை பராமரிப்பு, மீன்வளம், பால்வளம், நீர் வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சி, உணவு, கூட்டுறவுத்துறை, வருவாய்த்துறை, வனத்துறை, பட்டுவளர்ச்சித்துறை ஆகியவற்றின் மானியக்கோரிக்கைகளின் **கீழ் 34 ஆயிரத்து 220 கோடியே 64 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு** செய்யப்பட்டுள்ளது. (அட்டவணை - 1)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்' என்கிற மகாகவி பாரதியாரின் வாக்கை நிறைவேற்றுபவர்கள் உழவர் பெருமக்கள். தமிழ்நாடு உழவுத்தொழிலை மேன்மைப்படுத்தும் மாநிலம். நமக்காக உழைக்கும் மாடுகளுக்கும் நன்றி தெரிவிப்பதைத் திருவிழாவாகக் கொண்டாடும் பண்பாட்டுக்குத் தாயகம் தமிழகம்.

உழவு என்பது வேலையல்ல, பணி. அது பசிப்பிணி போக்கும் சேவை. உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி வேளாண்மை என்பது சிறப்பு மிகுந்த துறை என்பதை உருவாக்கும்பொருட்டு இத்துறை இந்த நிதிநிலை அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றிட அரும்பாடு படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பரிசோதனைக் கூடங்களிலிருந்து பண்ணைகளுக்குத் தொழில்நுட்பத்தை விரைவாக எடுத்துச்செல்லும் அதே வேளையில் நம் தொன்மையைப் பாதுகாக்கும் முயற்சியிலும் இத்துறை ஈடுபடும்.

ஒவ்வோர் உழவரும் வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, கோழிகள் வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்று வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுத் தங்கள் ஊதியத்தையும், உற்பத்தித்திறனையும் உயர்த்திக்கொள்ள இத்துறை எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும். அதற்காக உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பதோடு நின்றுவிடாமல் இத்துறையின் அலுவலர்கள் அனைவருக்கும் புத்தாக்கப் பயிற்சிகள் அளித்து ஊக்கப்படுத்தி அவர்களை உழவர் நலம் காக்கும் சிப்பாய்களாக சீர்மிகு பணிகள் செய்ய ஆயத்தப்படுத்தும். இந்தத் தொலைநோக்குத் திட்டங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டும் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் களப்பணிகள் திறம்பட ஒருங்கிணைக்கப்பட்டும் நிறைவேற்றி வைக்கப்படும் என்னும் உறுதியை இம்மாமன்றத்தில் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

இச்சட்டமன்றத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் வேளாண் பணிகளுக்காகத் தங்கள் தொகுதி மேம்பாட்டுத் தொகையிலும் நிதியை அவ்வப்போது ஒதுக்கி இந்நிதிநிலை அறிக்கையைத் தாண்டி செம்மையான பணிகள் நடைபெற ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த

வேளாண்மை நிதிநிலை அறிக்கை உழவர்களின் எதிர்பார்ப்பு. இயற்கை ஆர்வலர்களின் கனவு. தன்னார்வலர்களின் ஏக்கம். சிற்றூர் மக்களின் வாழ்வாதாரம். வேளாண் துறைக்கு மணிமகுடம்.

இத்தகைய இந்த மகத்தான மகுடத்தில் வேளாண்மை நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் வாய்ப்பைத் தந்து மயிலிறகாய் என்னை இடம்பெற வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்தின் முதல் வேளாண் நிதிநிலை அறிக்கையினை தயாரிப்பதற்கு எனக்கு பெரும் உதவி புரிந்த தலைமைச் செயலாளர் திரு.வெ.இறையன்பு, இ.ஆ.ப, அவர்களுக்கும், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன், இ.ஆ.ப அவர்களுக்கும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை-உழவர் நலத்துறை அரசு செயலர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன்.

**வாழ்க தமிழகம்! வளர்க வேளாண்மை!!**

**நன்றி.**

வணக்கம்.

| அட்டவணை – 1 | | | | |
|---|---|---|---|---|
| **வேளாண்மை மற்றும் சார்புத்துறைகளுக்கான 2021-22 ஆம் ஆண்டிற்கான மூலதனம் மற்றும் வருவாய் ஒதுக்கீடு** | | | | |
| | | | | (ரூபாய் ஆயிரத்தில்) |
| **வ.எண்** | **துறை** | **மூலதனம்** | **வருவாய்** | **மொத்தம்** |
| 1 | வேளாண்மைத்துறை | 200,43,05 | 8969,11,32 | 9,169,54,37 |
| 2 | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | 6,24,03 | 1,972,87,39 | 1,979,11,42 |
| 3 | வேளாண்மைப் பொறியியல் துறை | 26,61,02 | 606,28,22 | 632,89,24 |
| 4 | வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை | 285,61,28 | 474,37,91 | 759,99,19 |
| 5 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | … | 603,19,10 | 603,19,10 |
| 6 | விதைச்சான்று மற்றும் அங்கக சான்றளிப்புத்துறை | 2,50,00 | 45,27,47 | 47,77,47 |
| 7 | சர்க்கரைத்துறை | … | 7,40,83 | 7,40,83 |
| 8 | கால்நடை பராமரிப்புத்துறை | 470,32,38 | 773,33,96 | 1243,66,34 |
| 9 | பால்வளத்துறை | 2 | 44,37,09 | 44,37,11 |
| 10 | மீன்வளம்-மீனவர் நலத்துறை (உள்நாட்டு மீன்வளம்) | 2,40,49 | 33,19,78 | 35,60,27 |
| 11 | தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் | … | 394,55,41 | 394,55,41 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் | … | 37,05,16 | 37,05,16 |
| 13 | கூட்டுறவுத்துறை (பயிர்க்கடன் போன்றவை) | 11,58,56 | 6,236,05,26 | 6,247,63,82 |
| 14 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (நேரடி நெல் கொள்முதல் நிலையம்) | 867,54,09 | 8,604,44,17 | 9,471,98,26 |
| 15 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை [MGNREGS, ஊரக சாலைகள், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்] | 832,80,02 | 455,89,89 | 1,288,69,91 |
| 16 | பட்டு வளர்ச்சி துறை | … | 76,94,56 | 76,94,56 |
| 17 | வனத்துறை - வேளாண் காடுகள், மனித - விலங்கு மோதல் | 70,70,11 | 561,69,56 | 632,39,67 |
| 18 | வருவாய்த்துறை - உழவர் பாதுகாப்புத் திட்டம், மாநில பேரிடர் நிவாரண நிதி (பயிர் சேதம்) | 0 | 1547,82,86 | 1547,82,86 |
| | **மொத்தம்** | 2,776,75,05 | 31,443,89,94 | 34,220,64,99 |